## கண் மூடும் வேளையிலே...

ஆசிரியர் முஹம்மத் யூசுஃப் மிஸ்பாஹி, வெளியீடு : புர்கான் டிரஸ்ட்

---

- தூக்கத்தின் அவசியம்!
- தூங்கு முன்!
- துயிலும் முறைகள்
  - மேற்கண்ட துஆவின் கருத்துரை
  - துயிலும் முறைகள்
  - நிமிர்ந்து படுக்கலாமா?
  - முகம் குப்புறப் படுக்கக் கூடாது
  - படுக்கையை உதறிக் கொள்ளுங்கள்
  - தூங்கும் போது அல்லாஹ்வின் நினைவு!
- கனவு கண்டால்
  - அன்பு செலுத்துங்கள்
  - எல்லாம் நன்மைக்கே!
- நோயாளியை நலம் விசாரித்தல்
  - நோய் விசாரித்தல்
  - பிரார்த்தனை செய்ய வேண்டும்
  - நோயாளியின் குடும்பத்தாரிடம் விசாரிக்கலாம்
  - நோயாளி, பெண்ணாக இருந்தாலும் விசாரிக்கலாம்
- மரணப்பிடியில்
  - பொறுமையின் பரிசு
  - சோகத்தை வெளிப்படுத்தும் முறைகள்
  - கண்ணீர் வீட்டு அழலாம்
  - சோகத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு வரம்பு உண்டு
  - மரண தருவாயில் இருப்பவருக்கு செய்ய வேண்டியவை
  - மூடி வைக்க!
- மரணிக்கும் நல்லோர்களிடம் காணக்கூடிய அடையாளங்கள்
  - கண்மூடும் வேளையில் கலிமா
  - கண்மூடும் வேளையில் கலிமா
  - ஜும்ஆ நாளின் இரவிலோ பகலிலோ கண் முடுவார்.
  - இறைவனுக்காக. இஸ்லாத்திற்காகப் போர்க்களத்தில் உயிர்த்தியாகம் செய்வார்.
- விருந்து
- குளிப்பாட்டுதல்
- குளிப்பாட்டக் கூடாதவர்கள்
- தம்பதிகள் ஒருவரை ஒருவர் குளிப்பாட்டலாம்
- கபன்
- போரில் ஷஹீதானவர்களுக்குத் தொழ வைக்க வேண்டுமா?
- கடன்காரருக்குத் தொழவைக்கலாமா?
- கனீமத் பொருளை மோசடி செய்தவருக்குத் தொழவைக்கலாமா?

- காபிர்களுக்குத் தொழுகை நடத்தலாமா?
- ஜனாஸா தொழுகை விளக்கம்
- தக்பீர்கள்
- 6,7, தக்பீர்கள்
  - தக்பீர் கூறும் போது கைகளை உயர்த்த வேண்டுமா?
  - உயர்த்திய கைகளை எங்கே காட்ட வேண்டும்
- முதல் தக்பீருக்குப் பின்பு
- 2வது தக்பீருக்குப் பின்பு
- மற்ற தக்பீர்களில்....!
- ஒரு 'ஸலாம்' கொடுத்தால் போதுமா?
- தொழ வைப்பவர் எங்கே நிற்க வேண்டும்?
- காயிப் ஜனாஸா


## முன்னுரை

அல்லாஹ்விற்கே எல்லா புகழும்

கண்மூடும் வேளை என்றால் தூங்கும் நேரம் என்பதை நாம் அறிவோம். ஆனால், நிரந்தரமாகக் கண் மூடும் வேளை ஒன்று ண்டு என்பதைப் பெரும்பாலான மனிதர்கள் மறந்து விடுகின்றனர்.

எனவே கண்மூடும் வேளையிலே...! என்ற இந்நூலை நான் இரண்டு பகுதிகளாகப் பிரித்திருக்கின்றேன்.

முதல்பகுதி: உறக்கம் இத் தருணத்தில் மனிதன் என்னென்ன செய்ய வேண்டும்? இறை நினைவுடன் உறங்கி இறை நினைவுடன் எழுந்தால் அவனது உறக்கம் கூட வணக்கமாக மாறிவிடும்.

உறக்கத்தின் அவசியம், இறைநினைவுடன் எப்படி உறங்கவேண்டும்? உறங்கும்போது கனவுகள் தோன்றினால் மனிதன் எவ்வாறு நடந்து கொள்ள வேண்டும்? போன்ற மனிதனுக்குத் தேவையான மிக முக்கிய விஷயங்கள் திருமறை காட்டும் அடிப்படையிலும் நபிவழி கூறும் முறைப்படியும் விளக்கியுள்ளேன்.

இரவில் சீக்கிரமே உறங்கச் செல்லவேண்டும் என்பதன் அவசியத்தை நபி வழி கூறும் முறைப்படி விளக்கி இருக்கின்றேன். இது தற்காலத்தில் பேணப்பட வேண்டிய முக்கியமானதொரு விஷயமாகும். ஏனெனில் இக்காலத்தில் பெரும்பாலான மக்கள் இரவு நேரங்களில் வீண் கதைகள் பேசிக் கொண்டிருக்கின்றனர். அதனால் எவ்விதப் பயனும் இல்லை என்பது தெளிவு.

பெரும்பாலான மக்கள் இன்று தொலைக்காட்சி முன் அமர்ந்து தமது பொன்னான நேரத்தை வீணடிக்கின்றனர். இது கண்டிப்பாகத் தவிர்க்கப்பட வேண்டிய ஒன்றாகும். ஏனெனில் உறக்கத்தின் துவக்கம் உள்ளத்தில் இறை நினைவைத் தாங்கியதாக அமைய வேண்டும். ஆனால் தொலைக்காட்சியில் பொழுதைக் கழித்தவாறே உறக்கத்தில் ஆழ்ந்து விடும் இன்றைய நிலை மிக வருந்தத் தக்கதாகும்.

இரண்டாம் பகுதி:- நிரந்தரமாகக் கண்மூடும் வேளையான மரணம்.

மரணத்தின் முன்னர் ஏற்படும் நோய், நோய் விசாரித்தலின் சிறப்பு, மரண நேரத்தில் இறப்பவரின் நிலை, மரணமடைபவரின் அருகில் உள்ளவர்கள், உறவினர்கள் நடந்து கொள்ள வேண்டிய நடைமுறைகள், மரணத் தொழுகை ஆகிய அனைத்தும நபிவழிப்படி விளக்கப்பட்டுள்ளது.

மரண நேரத்திலும் மரணத்திற்கும் பின்னரும் முஸ்லிம்களில் பெரும்பாலோர் இஸ்லாம் கூறாத பல நூதன நடைமுறைகளைக் கையாளுகின்றனர். அவற்றைத் தவிர்த்து விட்டு இஸ்லாமிய மார்க்கம் காட்டிய வழியைப் பின்பற்றி வாழ வேண்டும் என்பதற்காகவே இந்நூல் எழுதப்பட்டுள்ளது.

இந்நூலை அழகிய முறையில் அச்சிட்டு உங்கள் கரங்களில் தவழ விட்டுள்ள "ஃபுர்கான் பப்ளிகேஷன் டிரஸ்ட்" நிறுவனத்தாருக்கு என் நன்றியை உரித்தாக்குகிறேன்.

இதைப்படித்து இதில் கூறப்பட்டுள்ள ஆதாரப் பூர்வமான குர்ஆன், நபிவழி அடிப்படையில் தமது செயல்களை அமைத்துக் கொண்டு இவ்வுலகில் நற்பயன்களை அடைவதுடன் இறையருளைப் பெற்று மறுமையிலும் அனைவரும் ஈடேற்றம் பெற வேண்டும் என்பதே எனது ஆசையாகும்.

எழுத்துலகில் எனது பணி தொடர துஆச் செய்யுங்கள், குறைகள் இருப்பின் சுட்டிக் காட்டினால் அடுத்த பதிப்பில் சீர் செய்து கொள்வோம்.

## தூக்கத்தின் அவசியம்!

பகல் முழுவதும் ஓடி உழைத்த மனிதன் இரவில் ஓய்வு எடுக்க வேண்டும். இரவில் நன்றாக ஓய்வெடுத்தால்தான் மறுநாள் தன் வாழ்வின் தேவைகளுக்காகப் புத்துணர்ச்சியுடன் புறப்பட முடியும். தொடர்ந்து வேலை செய்யும் இயந்திரங்கள் கூட வெகு விரைவில் பழுதடைந்து விடுவதை நாம் கண்கூடாகக் கண்டிருக்கிறோம். எனவே, மனிதனுக்கு உறக்கம், ஓய்வு அவசியம், பகலை மனித வாழ்வின் தேவைகளைத் தேடும் நேரமாகவும், இரவை உறங்கி ஓய்வு பெறும் நேரமாகவும் அல்லாஹ் ஆக்கியிருக்கின்றான். மனிதன் மட்டுமல்ல உலகில் உள்ள உயிர்ப் பிராணிகள் அனைத்தும் மரம், செடி, கொடிகள் உட்பட இரவில் ஓய்வு பெறுகின்றன. இந்த உறக்கம் மனிதன் தன் கவலைகளை, கஷ்டங்களை மறந்துவிடச் சிறந்த மருந்தாகும்.

(உஹதுப் போர்க்களத்தில் ஏற்பட்ட) அந்த துக்கத்திற்குப் பிறகு அவன் உங்களுக்கு அமைதி அளிப்பதற்காக தூக்கத்தை இறக்கி வைத்தான். உங்களில் ஒரு பிரிவினரை அந்தத் தூக்கம் சசூழ்ந்து கொண்டது. மற்றொரு கூட்டத்தினரோ அவர்களுடைய மனங்கள் அவர்களுக்குக் கவலையை உண்டாக்கின. (அல்குர்ஆன் 3:154)

உஹதுப் போர்க்களத்தில் முஸ்லிம்களுக்குக் கடுமையான சேதம் ஏற்பட்டது. அக்கவலையைப் போக்க அல்லாஹ் இறக்கிய தூக்கம் ஒரு கூட்டத்தாரையே சசூழ்ந்தது. தூங்காத கூட்டத்தார்கள் கவலையால் மனம் வாடினர்' என்பதை இந்தத் திருவசனம் விளக்குகிறது.

அப்துல்லாஹ்! எல்லா நாட்களும் நோன்பு வைப்பதாகவும், இரவு முழுவதும் தொழுவதாகவும் உன்னைப் பற்றிச் சொல்லப்படுகிறதே என்று நபி(ஸல்) அவர்கள் கேட்டனர். நான் ஆம்' (உண்மைதான்) என்று சொன்னேன். அதற்கு நபி(ஸல்) அவர்கள் அப்படிச் செய்யாதே" (சில நாட்கள்) நோன்பு வை. (சில நாட்கள்) நோன்பை விட்டு விடு. (கொஞ்ச நேரம்) தொழு (கொஞ்ச நேரம்) தூங்கு. ஏனெனில் உன் உடலுக்கு நீ செய்ய வேண்டிய கடமை உள்ளது. உன் கண்களுக்கு நீ செய்ய வேண்டிய கடமை உண்டு. உன் மனைவிக்கு நீ செய்ய வேண்டிய கடமை உண்டு என்று கூறினார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னி அல்ஆஸ்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் நஸயீ)

தூக்கத்தை ஒரு மனிதன் தன் கண்களுக்குச் செய்ய வேண்டிய கடமை" என நபி(ஸல்) அவர்கள் கூறி, தூங்காமல் தொழுது கொண்டே இருப்பதைத் தடுத்துள்ளார்கள்.

அ(ல்லாஹ்)வன்தான் உங்களுக்கு இரவை ஆடையாகவும், தூக்கத்தை இளைப்பாறுதலாகவும் ஆக்கியிருக்கின்றான். (அல்குர்ஆன் 25:47)

தூக்கம் மனிதனுக்கு நிம்மதியைப் பெற்றுத் தருகிறது. கடுமையான அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர்களுக்கும் கடும் நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கும் மருத்துவர்கள் தூக்க மாத்திரைகளை எழுதிக் கொடுக்கின்றனர். சரிவரத் தூங்காவிட்டால் பைத்தியம் கூடப்பிடித்துவிடும். எனவே தூக்கம் மனிதனுக்கும் மற்றப் பிராணிகளுக்கும் இன்றியமையாததாகும்.

மனிதன் தன் வாழ்வின் எல்லாச் செயல்களையும் அல்லாஹ்வும், அவனுடைய திருத்தூதர்(ஸல்) அவர்களும் காட்டிய வழியில்தான் அமைத்துக் கொள்ளவேண்டும். எனவே, அந்த அடிப்படையில் தூக்கத்தை எவ்வாறு நபி(ஸல்) அமைத்துக் கொண்டார்கள் என்பதைப் பற்றி இந்தத் தொடரில் நாம் காண்போம்.

## தூங்கு முன்!

நீங்கள் தூங்கும்போது உங்கள் வீடுகளில் நெருப்பை விட்டு வைக்காதீர்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

மதீனாவில் ஒரு வீடு தீப்பற்றி எரிந்துவிட்டது. அது பற்றி நபி(ஸல்) அவர்களிடம் சொல்லப்பட்டபோது,‘ அந்த நெருப்பை அணைத்துவிடுங்கள்‘ என்று கூறினார்கள்“ என அபூ மூஸா அல்அஷ்அரி(ரலி) அறிவிக்கிறார், (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

(தூங்கச் செல்லுமுன்) பாத்திரங்களை மூடிவிடுங்கள்! தண்ணீர்ப் பைகளைக் கட்டிவிடுங்கள்! (அன்றைய அரபு நாட்டில் தண்ணீர் வைப்பதற்காகத் தோல்பைகளைப் பயன்படுத்தினர்) வீட்டின் கதவை மூடி விடுங்கள்! விளக்குகளை அணைத்துவிடுங்கள்!“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்கள்: புகாரி, முஸ்லிம்.)

இந்த ஹதீஸில் விளக்குகளை அணைத்துவிடுங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறியது எல்லா விளக்குகளையும் அல்ல. மாறாக, நெருப்பால் எரியும் விளக்குகளைத்தான். இந்த ஹதீஸின் இறுதிப் பகுதியில் விளக்குகளை அணைக்கச் சொன்ன காரணத்தை நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

ஏனெனில் எலிகள் அந்த விளக்குகளின் மூலம் மக்களின் வீடுகளை எரித்துவிடக்கூடும்“ என்றனர். இந்த காரணத்துக்காகவே, விளக்குகளை அணைத்திட நபி(ஸல்) அவர்கள் கூறியதால் மின்விளக்குகளை உறங்கும்போது எரிய விடுவதில் தவறில்லை என்று உணரலாம். எனினும் கேஸ் அடுப்புகள், முறையற்ற மின் இணைப்புகள் ஆகியவற்றைக் கவனமாக அணைத்துவிட வேண்டும். சிலர் மின் இணைப்புகளைத் தவறான முறையிவ் தந்திருக்கலாம். மின்சாரம் செல்லும் வயர்கள் அறுந்து தொங்கிக் கொண்டும், ஒரு வயரையும் மற்றொரு வயரையும் இணைத்து அதன் மேல் முறைப்படி டேப் சுற்றப்படாமல் அப்படியே வீட்டிருந்தாலோ,அல்லது டேப் அல்லாத துணி போன்றவற்றால் கட்டியிருந்தாலோ ஷாக் அடிக்க வாய்ப்புண்டு. அத்தகைய இணைப்புகளை அணைத்துவிட்டே படுக்க வேண்டும்.

பாத்திரத்தை மூடிவைக்க எதையும் பெற்றுக்கொள்ளாத போது என்ன செய்ய வேண்டும் என்பதையும் நபி(ஸல்) அவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டனர்.

பாத்திரங்களை மூடிவைக்க எந்த பொருளும் இல்லாத போது பிஸ்மில்லாஹ்‘ கூறி, பாத்திரத்தின் மீது ஒரு குச்சியை வைத்து விடுங்கள்!‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: புகாரி, முஸ்லிம்)

இனிதூங்கும் முன் இரவில் செய்ய வேண்டிய, செய்யக் கூடாத இன்னும் சில செயல்களைப் பார்ப்போம்.

உங்கள் கால்நடைகளையும், உங்கள் சிறு குழந்தைகளையும் சசூரியன் மறையும்போது (துவங்கி) இஷா நேரத்தின் ஒரு பகுதி செல்லும் வரை (வெளியில்) விடாதீர்கள். ஏனெனில் சசூரியன் மறையத் துவங்கிய திலிருந்து இஷாவின் ஒரு பகுதி கழியும் வரை ஷைத்தான்கள் கிளம்பி வருகின்றனர்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: முஸ்லிம்)

முன் இரவில் ஷைத்தான்கள் பரவி வருகின்றனர். எனவே சிறுவர்களையும், கால்நடைகளையும் வெளியில் விடாமல் தடுத்து வைக்க வேண்டும் என்று மேற்கண்ட ஹதீஸிருந்து புரிந்து கொள்கிறோம்.

மக்ரிபு நேரத்திலிருந்து மறு நாள் சசூரியன் உதிக்கும் முன் யார் பாவ மன்னிப்பு தேடுகிறாரோ அவரின் பாவ மன்னிப்பை அல்லாஹ் ஏற்றுக் கொண்டு மன்னிப்பளிக்கிறான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார், (நூல்: முஸ்லிம்)

இரவின் கடைசிப் பகுதியில் (தூக்கத்தை விட்டும்) விழித்து எழ முடியாது என்று யார் பயப்படுகிறாரோ அவர் இரவின் ஆரம்பத் திலேயே (அதாவது தூங்கு முன்பே) வித்ரை தொழுது விடட்டும். யார் முழித்து எழ முடியும் என்ற நம்பிக்கையிலிருக்கிறாரோ அவர் (எழுந்து) இரவின் கடைசிப் பகுதியில் வித்ரை தொழட்டும். ஏனெனில் இரவின் கடைசியில் தொழும் தொழுகை சாட்சி சொல்லப்படக் கூடியதாகும் அதுவே சிறந்ததுமாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: முஸ்லிம், திர்மிதி)

மேற்கண்ட நபிமொழிகளிலிருந்து இரவில் பாவ மன்னிப்புத் தேடுவது இறைவனிடம் ஏற்றுக் கொள்ளப்படும் என்பதையும், வித்ரை யார் யார் எப்போது தொழ வேண்டும் என்பதையும் அறியலாம்.

நபி(ஸல்) அவர்கள் இஷா (தொழுகைக்கு) முன்பு தூங்குவதையும், இஷாவுக்குப் பின்பு இரவுக் கதைகள் பேசுவதையும் வெறுப்பவர்களாக இருந்தனர்" என அபூபர்ஸா(ரலி) அறிவிக்கிறார், (நூல்கள்: புகாரி, மற்றும் முஸ்லிம்)

இந்த ஹதீஸிலிருந்து இஷாவுக்கு முன்பு தூங்கக் கூடாது என்பதையும் அதன் பின்பு இரவுக் கதைகள் பேசக்கூடாது என்பதையும் தெரிந்து கொள்கிறோம். என்றாலும் மார்க்க சட்டத் திட்டங்கள் பற்றியும், விருந்தினர், வீட்டினர் ஆகியோருடன் ஆகுமான பேச்சுக்கள் பற்றியும் பின்வரும் ஹதீஸ்கள் தெரிவிக்கின்றன.

நள்ளிரவை நெருங்கும் நேரம் வரை நபி(ஸல்) அவர்களை (இஷா தொழுகைக்காக) எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம். அப்போது நபி(ஸல்) அவர்கள் வந்து எங்களுக்குத் தொழ வைத்துவிட்டு, அறிந்து கொள்ளுங்கள்! சிலர் தொழுது விட்டுத் தூங்கிவிட்டனர். நீங்களோ தொழுகையை எதிர்பார்த் திருக்கும் காலமெல்லாம் தொழுகையில் தான் இருக்கின்றீர்கள்" என்று எங்களுக்கு உபதேசம் செய்தார்கள்" என அனஸ்(ரலி) அறிவிக்கிறார், (புகாரி, முஸ்லிம்)

ஒரு நாள் இஷா தொழுத பின்பு, இன்று உயிருடன் உள்ள, எவரும் இப்பூமியில் நூறு ஆண்டுகளுக்குப்பின் உயிருடன் இருக்க மாட்டார்கள் என்று சஹாபாக்களுக்கு நபி(ஸல்) அவர்கள் சொற்பொழிவாற்றும் போது கூறினார்கள்" என இப்னு உமர் மற்றும் ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: புகாரி, முஸ்லிம், அஹ்மத் மற்றும் திர்மிதி)

மேற்கண்ட ஹதீஸ்களின் மூலம் நல்ல விஷயங்களை, மார்க்க விஷயங்களை இஷாவுக்குப் பின்பு பேசலாம் என்றும் வீண் பேச்சுக்கள் இராக்கதைகள் பேசிக் கொண்டிருப்பதைத்தான் நபி(ஸல்) அவர்கள் வெறுத்திருக்கின்றார்கள் என அறிகிறோம்.

## துயிலும் முறைகள்

நீ உன் படுக்கைக்கு (தூங்க) வரும்போது தொழுகைக்கு ஒளுச் செய்வது போல ஒளுச் செய்துகொள். பின்பு வலப்புறம் ஒருக்களித்துப் படுத்துக்கொள்! அப்போது

அல்லாஹு ம்ம அஸ்லம்து நஃப்ஸீ இலைக்க வவக்கஷ்து வஜ்ஹீ இலைக, வ எபவ்வழ்து அம்ரீ இலைக, வ அல்ஜஃது ழஹ்ரீ இலைக, ரஃக்பதன், வரஹ்பதன் இலைக லாமல்ஜஅ, வலா மன் ஜ அமின்க இல்லா இலைக ஆமன்து பிகிதாபி கல்லதீ அன்ஸல்த வபி நபிய்யிகல்லதீ அர்ஸல்த“

என்று ஓதிக் கொள்!“ அப்படி ஓதி இறந்து விட்டால் நீ தீனுல் இஸ்லாத்திலேயே இறந்துவிட்டாய். (இரவில்) நீ சொல்லும் சொற்களில் கடைசியாக இவற்றை ஆக்கிக்கொள்“ என்று என்னிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என பரா இப்னு ஆஸிப்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

மேற்கண்ட துஆவின் கருத்துரை:

யா அல்லாஹ்! நான் உனக்கே பணிந்தேன். என் காரியத்தை உன்னிடமே ஒப்படைத்தேன். (உன் நன்மைகளை) ஆசைவைத்தும் (உன் தண்டனைகளைப்) பயந்தும் உன்னை நம்பியும் தூங்குகிறேன். (நான்) சரணடையவும், பாதுகாப்புப் பெறவும் உன்னைத் தவிர வேறு வழியில்லை. நீ இறக்கியருளிய வேதத்தை நம்பினேன். நீ அனுப்பிய நபியையும் நான் நம்பினேன்.“

தூக்கத்திற்காக நபி(ஸல்) அவர்கள் (இரவில்) படுக்கைக்கு வந்தால் படுக்கும்போது வலது கையை வலது கன்னத்தின் கீழே வைத்துக்கொள்வார்கள். (வலப்புறம் ஒருக்களித்துப்படுப்பார்கள். அப்போது அல்லாஹு ம்ம பிஸ்மிக அமூத்து வ அஹ்யா“ என்று கூறுவார்கள். (தூக்கத்தை விட்டு) எழும் போது, ஷீ அல்ஹம்து லில்லாஹில்லதீ அஹ்யானா பஃதமா அமா தனா வ இலைஹின் னுஹு ர் என்று கூறுவார்கள்“ என ஹு தைபா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் அபூதாவூத்)

அல்லாஹு ம்ம பிஸ்மிக‘ என்பதன் பொருள்:

யா அல்லாஹ்! உன் திருப்பெயர் கொண்டே நான் தூங்கச் செல்கிறேன். உன் திருப்பெயர் கொண்டே எழுகிறேன்.“

அல்ஹம்துலில்லாஹில்லதீ‘ என்பதன் பொருள்:

நம்மை உறங்கச் செய்த பின் விழிக்கச் செய்த இறைவனுக்கே எல்லாப்புகழும், அவனிடமே நாம் எழுப்பப்படுவோம்.

மேற்கண்ட இரண்டு நபிமொழிகளின் மூலம், ஒளூச் செய்துவிட்டு, வலக் கைகயை வலக் கன்னத்தின் கீழ் வைத்து வலப்புறம் ஒருக்களித்துப் படுப்பது நபிவழி என்றும் அந்த நபிமொழிகளில் வந்துள்ள துஆக்களை ஓதவேண்டும் என்பதையும் தெரிந்து கொள்கிறோம்.

### துயிலும் முறைகள்

ஒருவர் படுக்கும்போது ஒளூச் செய்துகொள்ள வேண்டும் என்பதையும் வலப்புறம் ஒருக்களித்துப்படுத்து ஓத வேண்டியவற்றையும் படித்தோம். படுக்கும் முறைகள் சிலவற்றைப் பார்ப்போம்.

### நிமிர்ந்து படுக்கலாமா?

ஒருவர் நிமிர்ந்து படுத்திருக்கும்போது ஒரு காலை மற்றொரு கான் மீது போட வேண்டாம். (அதாவது கால் மேல் கால் போட்டுப்படுக்க வேண்டாம்)“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம், அஹ்மத் மற்றும் திர்மிதி)

கால்மேல் கால்போட்டு அயர்ந்து உறங்கும்போது மூட்டப்படாத கைலி, வேஷ்டி போன்ற ஆடைகள் அணிந்திருந்தால் மறைக்கப்பட வேண்டிய மர்மஸ்தானம், தொடை போன்ற பகுதிகள் பிறர் பார்வையில் பட்டுவிடலாம். எனவே தான் நபி(ஸல்) அவர்கள் கால்மேல் கால்போட்டு படுத்திருப்பதைத் தடுத்துள்ளனர்.

அதே நேரத்தில், மறைக்கப்பட வேண்டிய பகுதிகள் வெளிப்படாதவாறு கவனமாக அவ்வாறு படுத்திருக்கலாம் என்பதைப் பின்வரும் நபி(ஸல்) அவர்களின் செயல் உறுதிப்படுத்துகிறது.

நபி(ஸல்) அவர்கள் ஒரு காலின் மேல் மற்றொரு கால் போட்டு பள்ளியில் நிமிர்ந்து படுத்திருந்தார்கள்" என அப்துல்லாஹ் இப்னு ஜைது(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

மேலும் இக்காலத்தில் மூட்டப்பட்ட கைலிகளைப் பயன்படுத்துவோரும் பேண்ட்" போன்ற நன்றாக மறைத்திடக்கூடிய ஆடைகளைப் பயன்படுத்து பவர்களும் நிமிர்ந்து கால்மேல் கால்போட்டுப் படுக்கலாம். அவ்வாறில்லாமல் மறைக்கப்பட வேண்டிய பாகங்கள் தெரியும்படிதான் படுக்கக் கூடாது என்பதை மேற்கண்ட ஹதீஸ்கள் மூலம் அறிந்து கொள்ளலாம்.

## முகம் குப்புறப் படுக்கக் கூடாது

ஆதாரப்பூர்வமான நபிமொழிகளில் முகம் குப்புறப் படுக்கத் தடை இருக்கிறது.

நான் பள்ளிவாயிலில் (முகம்) குப்புறப் படுத்திருந்தேன். அப்போது ஒரு மனிதர் தம் காலால் என்னை (லேசாக மிதித்து) அசைத்து இது அல்லாஹ்வுக்கு கோபத்தை ஏற்படுத்தும் படுக்கை' என்றார். நான் (திரும்பி அவரை யாரென்று அறிய) பார்த்தேன். அது நபி(ஸல்) அவர்களாக இருந்தார்கள்" என எயீஷ்(ரலி) அறிவிக்கிறார் . (நூல்கள்: அபூதாவூத், அஹ்மத், இப்னுமாஜா மற்றும் திர்மிதீ)

ஒரு மனிதர் குப்புறப்படுத்திருப்பதைக் கண்டு, இது அல்லாஹ் விரும்பாத படுக்கை' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அஹ்மத், திர்மிதி, அபூதாவூத் மற்றும் இப்னுமாஜா)

மேற்கண்ட நபிமொழிகளின் மூலம் முகம் குப்புறப்படுக்கக் கூடாது என்பதை அறிந்து கொள்கிறோம். முகம் குப்புறப்படுக்கும்போது தவறான எண்ணங்கள், சிந்தனைகள் ஏற்பட வாய்ப்புண்டு என்பதையும் மறுப்பதற்கில்லை.

## படுக்கையை உதறிக்கொள்ளுங்கள்

உங்களில் ஒருவர் படுக்கும்போது தன் கீழாடையின் ஓரத்தைக் கொண்டு, விரிப்பை மூன்று முறை தட்டிக்கொள்ளட்டும். ஏனெனில் அவர் இல்லாதபோது அதில் என்ன ஏற்பட்டது என்பதை அவர் அறிய மாட்டார்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம் மற்றம் திர்மிதி)

கீழாடையின் ஓரத்தைக் கொண்டுதான் படுக்கையைத் தட்ட வேண்டுமென்றால் பேண்ட்ஸ்" போன்ற கீழாடை அணிந்திருப்போர் எப்படி தட்டுவது? கீழாடையின் ஓரத்தைக் கொண்டு தட்டாமல் படுக்கையை உதறிக் கொள்ளலாமா என்பன போன்ற கேள்விகள் மேற்கண்ட ஹதீஸைப் படிக்கும்போது ஏற்படுகின்றன.

நபி(ஸல்) அவர்கள் கீழாடையின் ஓரத்தைக் கொண்டு தட்ட வேண்டும் என்று மட்டும் கூறியிருந்தால் நாம் அப்படித்தான் செய்ய வேண்டும் வேறு வழியில்லை.

ஆனால் நபி(ஸல்) அவர்கள் படுக்கையைத் தட்ட வேண்டியதற்கான காரணத்தையும் இணைத்துக் கூறியுள்ளார்கள். அதாவது அவர் இல்லாதபோது அதில் என்ன ஏற்பட்டது (விழுந்தது) என்பதை அவர் அறியமாட்டார். எனவே தட்டிக் கொள்ளட்டும் என்ற காரணத்தையும் கூறியுள்ளார்கள்.

எனவே அவர் இல்லாதபோதோ, படுக்கையைச் சுருட்டி வைத்திருக்கும் போதோ, அதில் விழுந்துவிட்ட அழுக்கு தூசி போன்றவற்றையும், மூட்டைப் பூச்சி, கரப்பான் போன்றவை இருந்தால் அதைச் போக்க எவ்வாறெல்லாம் முடியுமோ அவ்வாறெல்லாம் கையாண்டு அதைப் போக்க வேண்டும்.

### தூங்கும்போது அல்லாஹ்வின் நினைவு!

அல்லாஹ்வை நினைக்காமல் ஒருவன் படுத்தால், அவனுக்கு அல்லாஹ் (ஜல்) இடமிருந்து ஒரு குறை ஏற்பட்டுவிடுகிறது' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார் (நூல்: அபூதாவூத்)

தூக்கத்தையும் வணக்கமாக இஸ்லாம் ஆக்கியிருக்கிறது. எனவே தூங்கும்போதும் ஒளுச்செய்து இறை நினைவுடன் தூங்க வேண்டும் என்று இஸ்லாம் வலியுறுத்துகிறது.

1. படுக்கும்போது பிஸ்மிக ரப்பீ வழஃது ஜன்பீ வபிக அர் எபவுஹு இன் அம் ஸத்த ந எப்ஸீ எபர்ஹம்ஹா வ இன் அர்ஸல் தஹா எபஹ் எபழ்ஹா பிமா தஹ் எபலு பிஹி இபாதகஸ்ஸாலிஹீன்.

பொருள்: என் இறைவனே! உன் திருப்பெயர் கொண்டே நான் படுக்கிறேன். அந்தத் திருப்பெயர் கொண்டே எழுவேன். (தூக்கத்தில்) என் உயிரை நீ கைப்பற்றிக்கொண்டால் அதற்கு நீ கருணை காட்டு அதை (கைப்பற்றாமல்) விட்டுவிட்டால், உன் நல்லடியார்களை எவ்வாறு பாதுகாப்பாயோ அவ்வாறு பாதுகாத்துக்கொள்! என்று ஓதவேண்டும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம் மற்றும் திர்மிதீ)

2. ஒவ்வொரு நாள் இரவும் நபி(ஸல்) அவர்கள் படுக்கும்போதும் தம் கைகளை ஒன்றாகச் சேர்த்து அதில் ஊதி.

குல்ஹுவல்லாஹு அஹத்,

குல் அவூது பிரப்பில் ஃபலக்

மற்றும் குல் அவூது பிரப்பின்னாஸ் ஆகிய மூன்ற அத்தியாயங்களை ஓதுவார்கள். பின்னர் தம் உடலில் எங் கெல்லாம் முடியுமோ அங்கெல்லாம் தடவிக் கொள்வார்கள். தம் தலையில் ஆரம்பித்து முகம், முன் உடற்பகுதி ஆகியவற்றில் தடவுவார்கள். மூன்று முறை இப்படிச் செய்வார்கள்" என அன்னை ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம்)

3. சூரத்துல் பகராவின் கடைசி இரண்டு ஆயத்துக்களை இரவில் ஒருவர் ஓதினால் அவை இரண்டும் அவருக்குப் போதுமானதாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூமஸ்வூத் அல் அன்ஸாரி(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

4. அன்னை பாத்திமா(ரலி) அவர்கள் வீட்டு வேலைகளின் கடினத்தால் நபி(ஸல்) அவர்களிடம் பணியாள் கேட்டபோது பணியாளர்களைவிட மிகச் சிறந்த ஒன்றை அறிவித்துத் தரட்டுமா?' என்று கேட்டு நபி(ஸல்) அவர்கள், பாத்திமா(ரலி), அலீ(ரலி) ஆகியோரிடம் படுக்கும்போது சுப்ஹானல்லாஹ் 33 முறை, அல்ஹம்துலில்லாஹ் 33முறை, அல்லாஹு அக்பர் 34 முறை ஓதிக்கொள்ளுங்கள். இது பணியாளர்களை விட உங்கள் இருவருக்கும் மிகச் சிறந்தது என்று கூறினார்கள்" என அலீ(ரலி) அறிவிக்கிறார். (ஹதீஸின் சுருக்கம்) (நூல்: புகாரி, முஸ்லிம்)

5. நபி(ஸல்) அவர்கள் தூங்குவதற்காக வலது கையை வலது கன்னத்தின் கிழ் வைத்துப்படுத்த பின் அல்லாஹு ம்ம கினீ அதாபக யவ்ம தப் அது இபாதக“ (ம்இறைவா! உன் அடியார்களை நீ எழுப்பும் நாளில் உன் வேதனையை விட்டும் என்னைக் காப்பாயாக!) என்று மூன்று முறை ஓதுவார்கள் என உம்முல் மு∴மினீன் ஹப்ஸா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அபூதாவூத், திர்மிதீ, அஹ்மத் மற்றும் இப்னுஹிப்பான்)

6. இரவில் தூங்கும் முன் ஆயத்துல் குர்ஸீ ஓதுவதற்கும் நபி(ஸல்) அவர்களின் அங்கீகாரம் உள்ளது“ (நூல்: புகாரி)

7. நபி(ஸல்) அவர்கள் படுக்கும்போது, அல்லாஹ், அவனைத்தவிர (வணக்கத்திற்குரிய) நாயன் வேறு இல்லை: அவன் என்றென்றும் ஜீவித்திருப்பவன்: என்றென்றும் நிலைத்திருப்பவன்: அவனை அரி துயிலோ, உறக்கமோ பீடிக்கா: வானங்களிலுள்ளவையும் பூமியிலுள்ளவையும் அவனுக்கே உரியன: அவன் அனுமதியின்றி அவனிடம் யார் பரிந்துரை செய்ய முடியும்? (படைப்பினங்களுக்கு) முன்னருள்ளவற்றையும்,அவற்றுக்குப் பின்னருள்ளவற்றையும் அவன் நன்கறிவான்: அவன் ஞானத்திலிருந்து எதனையும், அவன் நாட்டமின்றி, எவரும் அறிந்து கொள்ள முடியாது: அவனுடைய அரியாசனம் (குர்ஸிய்யு) வானங்களிலும், பூமியிலும் பரந்து நிற்கின்றது: அவ்விரண்டையும் காப்பது அவனுக்குச் சிரமத்தை உண்டாக்குவதில்லை-அவன் மிக உயர்ந்தவன்: மகிமை மிக்கவன். (அல்குர்ஆன் 2:255)

அல்ஹம்துலில்லாஹல்லதீ அத்அமனா வஸகானா வக ∴பானா வ ஆவானா ∴பகம் மிம்மன் லா கா எபிய லஹு வலா மூவிய, (பொருள்: எத்தனையோ பேரை அரவணைப்பவனும் அவன் (தேவைகளைப்) பூர்த்தி செய்பவனும் இல்லாத நிலையில் நம்மை அரவணைத்து நமது (தேவைகளைப்) பூர்த்தி செய்து நமக்கு உணவளித்து குடிக்க (தண்ணீரையும்) தந்த அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும்) என்று ஓதுபவர்களாக இருந்தார்கள்“ என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம், அபூதாவூத் திர்மிதி மற்றும் நஸயீ)

8. அல்லாஹு ம்ம ரப்பஸ் ஸமாவாதி வரப்பல் அர்ழி வரப்பல் அர்ஷில் அழீம் ரப்பனா வரப்ப குல்லி ஷையின் எபாலிகல் ஹப்பி வன்னவா வமுனஸ்ஸிலத் தவ்ராதி, வல் இன்ஜீலி, வல் ∴புர்கான் அவூதுபிக்க மின்ஷர்ரி குல்லி தீ ஷர்ரின் அன்த ஆகிதுன் பிநாஸியதிஹி அல்லாஹு ம்ம அன்தல் அவ்வலு எபலய்ஸ கப்லக ஷையுண் வ அன்தல் ஆகிரு எபலய்ஸ ப∴தக ஷையுன். வ அன்தல்லாஹிரு எபலய்ஸ எபவ்கக ஷையுன் வ அன்தல் பாதினு எபலய்ஸ் தூனக ஷையுன் இக்ழீ அன்னத்தைன வ அ∴க்னினா மினல் பக்ர்“ (பொருள்: என் இறைவனே! வானங்களைப் படைத்துப் பரிபாலிப்பவனே! பூமியைப் படைத்துப் பரிபாலிப்பவனே! மகத்தான அர்ஷு க்கு உடையவனே! எங்களையும், இன்னும் ஒவ்வொரு பொருளையும் படைத்துப் பரிபாலிப்பவனே! விதையைப் பிளந்து முளைக்கச் செய்பவனே! தவ்ராத்துகளையும், இன்ஜீல், குர்ஆன் ஆகிய வேதங்களை இறக்கியருளியவனே!

ஒவ்வொரு தீங்கானவற்றின் தீங்கை விட்டும் உன்னிடம் நான் பாதுகாப்புத் தேடுகிறேன். ஒவ்வொருவனின் நெற்றி முடியையும் நீதான் பிடித்து வைத்திருக்கிறாய்! யா அல்லாஹ்! நீயே முந்தியவன்! உனக்கு முன்னர் எதுவுமில்லை! நீயே கடைசியானவன்! (விளக்கத்தில்) உனக்குப் பின் ஏதுமில்லை: நீயே வெளிப்படையானவன்: உனக்கு மேல் யாருமில்லை! நீயே அந்தரங்கமான வற்றை அறிபவன்! உன்னையன்றி (அந்தரங்கமானவற்றை அறிபவன்) எவனுமே இல்லை!

எங்கள் கடன்களை நிறைவேற்றிடு! ஏழ்மையை விட்டு நீக்கி எம்மைத் (பிறர் பால்) தேவையற்றவர்களாக ஆக்கிவிடு!)‘ என்று நபி(ஸல்) அவர்கள் தூங்கும்போது ஓதுவார்கள்“ என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம், அபூதாவூத், திர்மிதி மற்றும் அஹ்மத்)

மேற்கண்டவை அனைத்தையும் அல்லது கால அவகாசத்தைப் பொறுத்து சிலவற்றை மட்டும் ஓதி விட்டுப்படுக்க வேண்டும். இறைநினைவின்றி படுக்கலாகாது.

## கனவு கண்டால்

உறங்கினால் மனிதன் கனவுகள் காண்பது இயற்கையான ஒன்று. அவற்றில் நல்ல, கெட்ட ஆகிய இரண்டு கனவுகளும் உண்டு.

ஒருவர், தான் விரும்பியதைக் கனவில் கண்டால் அது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளது. அப்போது அதற்காக அவர் அல்லாஹ்வைப் புகழட்டும். அதைப் பற்றி அவருக்கு மிகப் பிரியமானவர்களிடம் மட்டும் கூறட்டும். அதுவல்லாமல் அவர் வெறுக்கும் படியான கனவு கண்டால் அது ஷைத்தானிடமிருந்து வந்துள்ளது. அப்போது அவர் அதன் தீங்கைவிட்டும் பாதுகாப்புத் தேடட்டும். யாரிடமும் அதைப் பற்றிச் சொல்ல வேண்டாம். அவருக்கு அதனால் எந்தத் தீங்கும் ஏற்படாது என்று நபி(ஸல்) கூறினார்கள்“ என அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம் மற்றும் திர்மிதி)

ஒருவர் நல்ல கனவுகண்டால் அது அல்லாஹ்விடமிருந்து வந்துள்ளது. குழப்பமான தீய கனவுகள் ஷைத்தானிடமிருந்து வந்தவையாகும். எனவே ஒருவர் தாம் வெறுக்கின்ற தீய கனவு கண்டால் இடதுபக்கம் மூன்று முறை துப்பட்டும். அவூது பில்லாஹி மினஷ்ஷைத் தானிர்ரஜீம் - விரட்டப்பட்ட ஷைத்தானை விட்டும் அல்லாஹ்விடம் பாதுகாப்புத் தேடுகிறேன் என்று கூறி ஷைத்தானை விட்டும் பாதுகாப்புத் தேடட்டும். அது அவருக்கு எந்த தீங்கையும் ஏற்படுத்தாது‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அபூகதாதா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்.)

முஸ்லிமின் மற்றொரு அறிவிப்பில் இடப்புறம் மூன்று முறை துப்பிவிடட்டும் என்பது ஷைத்தானின் தீங்கை விட்டும், அல்லாஹ்விடம் மூன்று முறை பாதுகாப்பு தேடட்டும். அவர் படுத்திருந்த முறையை விட்டும் மாறிப்படுக்கட்டும்“ என இடம் பெற்றுள்ளது. இதை ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்.

தற்காலத்தில் கனவுகளுக்கு விளக்கம் என்று பல புத்தகங்கள் வந்துள்ளன. அவற்றில் ஏதேதோ விளக்கமாகக் கூறப்பட்டுள்ளது. அதைப்படித்து நாம் நமது மனதைக் குழப்பி மனநோய்க்கு ஆளாகி விடக் கூடாது. அதுபோல கண்டவர்களிடம் கூறினால் கண்டபடி விளக்கம் கூறி நம் நிம்மதியைக் குலைத்து விடுவார்கள். எனவே நபி(ஸல்) அவர்கள் கூறியது போல நல்ல கனவு கண்டால் நம் மீது மிகப் பிரியமானவர்களிடம் மட்டும் கூற வேண்டும். வேறுயாரிடமும் கூறக் கூடாது. கெட்ட கனவாக இருந்தால் யாரிடமும் கூறாமல் இடதுபுறம் மூன்றுமுறை துப்பிவிட்டு அல்லாஹ்விடம் ஷைத்தானின் தீங்கைவிட்டும் மும்முறை பாதுகாப்புத் தேடி படுத்திருந்த அமைப்பை விட்டும் மாறிப்படுக்கலாம் அல்லது இடம் மாறிப் படுக்கலாம் அல்லது எழுந்து தொழுது விட்டுப் படுக்கலாம். இப்படிச் செய்தால் அந்தக் கனவினால் அவருக்கு எந்தத் தீங்கும் நேராது.

கண்மூடும் வேளையில் மற்றொன்று நிரந்தரமாகக் கண் மூடும் மரண வேளையாகும்.

இவ்வுலகில் பிறக்கும் எவரும் மரணமடைவது நிச்சயம். இறைவனை நம்பாத - இறைவனே இல்லை என்று கூறுகின்ற நாத்திகர்கள் கூட சந்தேகமின்றி நம்புவது மரணம் ஒன்றையே. இவ்வுலகில் பிறக்கின்ற உயிரினங்கள் யாவும் மரணித்தேயாக வேண்டும்.

நீங்கள் எங்கிருந்தபோதிலும் உங்களை மரணம் வந்தடைந்தே தீரும். மிகவும் உறுதியாகக் கட்டப்பட்ட கோட்டைகளில் நீங்கள் இருந்தாலும் சரியே...“ (அல்குர்ஆன் 4:78)

நபி(ஸல்) அவர்கள் இந்த உறுதியான மரணத்தை நினைத்துக் கொண்டேயிருக்க வேண்டும். அதை மறந்து வாழக்கூடாது எனக் கூறியிருக்கின்றார்கள்.

இன்பங்களைத் துண்டித்து விடும் மரணத்தை அதிகமாக நினைவு கூருங்கள்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: திர்மிதி, நஸயீ, இப்னுமாஜா மற்றும் அஹ்மத்)

மனிதன் நோய்வாய்ப்படும் போதுதான் மரணத்தை அதிகமாக நினைவு கூர்கிறான். அந்த நோயிலிருந்து நாம் மீள்வோமா, வீழ்வோமா என்று நோயாளியும் அவரைச் சார்ந்தோரும் எண்ணுவதுண்டு.

## அன்பு செலுத்துங்கள்

நோயாளியிடமும், உடல் ஊனமுற்றவர்கள், முதியவர்கள் மீதும் நாம் எரிந்து விழாமல் அவர்களைப் பரிவுடன் கவனித்துக் கொள்ள வேண்டும். அவர்கள் மூலம் நமக்கு ஒரு சில கஷ்டங்கள் ஏற்பட்டாலும், நாம் பொறுமையுடன் சகித்துக்கொள்ள வேண்டும். குறிப்பாக வயது முதிர்ந்த காலத்தில் நமது வீடுகளில் படுத்த படுக்கையாகக் கிடக்கும் நமது பாட்டனார், பாட்டி, தாய் தந்தையர் இவர்களை நாம் நன்கு கவனிக்க வேண்டும்.

கண் பார்வையற்றவர்கள் மீது (போரில் ஈடுபடாமல் இருப்பது) குற்றமில்லை. அவ்வாறே முடவர் மீதும் குற்றமில்லை. (அல்குர்ஆன் 48:17, 9:91)

குறிப்பிட்ட நாட்களில் (நோன்பு நோற்பது) கடமையாகும். (அந்நாட்களில்) நோயாளியாகவோ, பயணத்திலோ எவரேனும் இருந்தால் அவர், (விடுபட்ட) அந்நாட்களின் நோன்பைப் பின்னால் வரும் நாட்களில் நோற்றுக் கொள்ளட்டும். (அல்குர்ஆன்2:184)

தண்ணீரைப் பயன்படுத்த முடியாத நிலையில் நோயாளி இருப்பின், அவர் தயம்மும்‘ செய்துகொள்ளலாம். (அல்குர்ஆன் 4:43)

மேற்கண்ட வசனங்களின் மூலம் நோயுள்ளவர்களுக்கும், பலஹீனர் களுக்கும், வயது முதிர்ந்தவர்களுக்கும் அல்லாஹ் சில சலுகைகளை வழங்கி, அவர்கள் அதற்கு தகுதி படைத்தவர்கள் என்றும் வலியுறுத்துகின்றான். எனவே, நாமும் நோயாளிகளிடம் கடுமையாக நடந்துகொள்ளாமல் பரிவுடனும், அன்புடனும் நடந்து கொள்ள வேண்டும்.

## எல்லாம் நன்மைக்கே!

நோய்வாய்ப்படுவது, ஆரோக்கியமான நிலையில் இருப்பது, கஷ்டங்களில் சிக்குவது, செல்வச் செழிப்புடன் இருப்பது ஆகிய அனைத்தும் இறைநம்பிக்கையாளனுக்கு நன்மை அளிக்கக்கூடியதாகவே அமைகிறது என்பதை பின்வரும் நபிமொழி விளக்குகிறது.

இறைநம்பிக்கையாளன் ஒருவன் காரியங்கள் பெரும் ஆச்சரியமாகவே இருக்கிறது. அவனுடைய காரியங்கள் அனைத்தும் அவனுக்கு நன்மையாகவே இருக்கின்றன. இறைநம்பிக்கையாளன் ஒருவனைத் தவிர, வேறு யாருக்கும் இது போல் ஏற்படுவதில்லை. அவனுக்கு ஒரு மகிழ்வான விஷயம் நேர்ந்தால் (இறைவனுக்கு) நன்றி செலுத்துகிறான். அது அவனுக்கு நன்மையாக ஆகிவிடுகிறது. அவனுக்கு ஒரு தீமை ஏற்பட்டால் பொறுத்துக்கொள்கிறான். அதுவும் அவனுக்கு நலவாகவே ஆகிவிடுகிறது“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அபூயஹ்யா ஸு ஹைப் இப்னு ஸினான்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

எனவே, ஒரு முஸ்லிமுக்கு நல்லது நேர்ந்தாலும் நன்மையே, தீமை - துன்பம் - துயரம் - நோய் ஏற்பட்டாலும், அதுவும் கூட, நன்மையே விளைகிறது. ஆனால், அப்படி துன்ப - துயரங்கள் நேரும்போது பொறுமையை மேற்கொள்ள வேண்டும். அல்லாஹ்வின் தீர்ப்பை ஏற்றுப் பொறுமையைக் கடைப் பிடிக்க வேண்டும். இறைவன் எதைச் செய்தாலும் அது நன்மைக்காகவே என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் மரணத் தருவாயிலிருந்த ஒரு வாலிபனைக் காணச் சென்று, உன் நிலையென்ன?‘ என்று கேட்டார்கள். அதற்கு அவர், இறைத்தூதர் அவர்களே! அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் அல்லாஹ்வின் பேரருளை விரும்புகிறேன். என் பாவங்களை எண்ணி அஞ்சிக் கொண்டும் இருக்கிறேன்ம் எனக் கூறினார். அப்போது நபி(ஸல்) அவர்கள், இம்மாதிரியான மரண வேளையில் ஓர் அடியானின் உள்ளத்தில் இறைவன் நம்மைத் தண்டிப்பான் என்ற அச்சமும், அவன் நம்மை மன்னிப்பான் என்ற ஆதரவும் ஒன்று சேர்ந்தால் அல்லாஹ் அவன் விரும்பும் மன்னிப்பை அளித்து அவன் அஞ்சுகின்ற தண்டனைகளை இல்லாமல் ஆக்குவான் என்று கூறினார்கள். (நூல்: திர்மதி, இப்னுமாஜா)

மேற்கண்ட ஹதீஸின் அடிப்படையில் நோயாளியின் உள்ளத்தில் இறைவனைப் பற்றிய அச்சம் இருக்க வேண்டும்.

நோய் கடுமையானாலும், அனைவராலும் கைவிடப்பட்டு வாழ்க்கை வெறுத்துப் போன நிலையிலும், அல்லது துன்பங்கள் வாட்டும்போது, ஆக எப்படிப்பட்ட மோசமான சூழ்நிலையிலும் மரணத்தை வேண்டக் கூடாது, ஆனால் பின்வருமாறு கேட்கலாம்.

யா அல்லாஹ்! எனக்கு வாழ்க்கை நன்மையானதாக இருப்பின் இவ்வுலகில் என்னை வாழச் செய்வாயாக! நான் மரணமடைவது நன்மையானதாக இருப்பின் என்னை மரணமடையச் செய்வாயாக! என பிரார்த்திக்கலாம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ (நூல்: புகாரி, முஸ்லிம், ஹாகிம்)

நோயாளியாக இருக்கும் ஒருவர் பிறருக்கு கடன் கொடுக்க வேண்டியதாக இருந்தாலோ, மற்றவர்களின் பொருட்கள் ஏதேனும் அவரிடம் இருந்தாலோ அதைப் பற்றி விவரமாக மரண சாசனம் எழுதி வைக்க வேண்டும் அல்லது தமக்குப்பின்னால் பொறுப்பாளராக இருப்போரிடம் அவற்றை தெளிவாகக் கூறிவிட வேண்டும்.

இறைநம்பிக்கையாளர் ஒருவர் மரணசாசனம் (வஸிய்யத்) எழுதி வைப்பது கட்டாயமாகும். ஏனெனில் மரண சாசனம் எழுதப்பட்ட உயிலைத் தன் தலைக் கடியில் வைக்காமல் இரண்டு இரவுகளைக் கழிப்பது முஸ்லிமாக இருக்கும் ஒருவருக்கு ஆகாத செயலாகும்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்.

இந்த நபிமொழியைக் கேட்ட நாளிலிருந்தே ஒவ்வொரு இரவும் நான் என் மரண சாசனத்தை எழுதிவைக்காமல் இருக்கவில்லை என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத் மற்றும் திர்மிதீ)

நோயாளி தன் சொத்திலிருந்து மூன்றில் ஒரு பாகத்தை மட்டும் மரண சாசனமாக யாருக்கேனும் எழுதிவைக்கலாம் சொத்துரிமை உள்ளவர்களுக்கு மரணசாசனம் எழுதிவைக்கக் கூடாது. சொத்துரிமை இல்லாதவர்களுக்கே எழுதிவைக்க வேண்டும். மரணசாசனத்திற்கு முஸ்லிமான இரண்டு ஆண்கள் சாட்சிகளாக இருக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்களின் இறுதி ஹஜ்ஜின் போது நான் கடுமையாக நோய்வாய்பட்டிருந்தேன் நபி(ஸல்) அவர்கள் நோய் விசாரிக்க என்னிடம் வந்தபோது நான், இறைத்தூதர் அவர்களே! நான் கடுமையாக நோய்வாய்பட்டுள்ளேன். என்னிடம் அதிகமான செல்வம் உள்ளது. என் மகள் மட்டுமே எனக்கு வாரிசாக உள்ளார். எனவே என் செல்வத்தில் மூன்றில் இரண்டு பங்கை வஸிய்யத்:‘ செய்து தர்மம் கொடுத்து விடட்டுமா? என்று கேட்டேன். அதற்கு அவர்கள், அவ்வாறு செய்ய வேண்டாம்‘ என்று கூறினார்கள். அப்படியானால் சரிபாதியைத் தர்மமாகக் கொடுத்து விடட்டுமா?ம் என்று கேட்டேன். வேண்டா என்றார்கள். மூன்றில் ஒரு பங்கையாவது வஸிய்யத்‘ செய்து தர்மமாக கொடுக்க ஏற்பாடு செய்யலாமா?‘ என்று கேட்டேன். மூன்றில் ஒரு பங்கா? மூன்றில் ஒரு பங்கு கூட அதிகமே!

ஸஅதே! உன் வாரிசுகளை மக்களிடம் கையேந்தும் ஏழைகளாகக் விட்டுச் செல்வதை விட அவர்களைச் செல்வந்தர்களாக விட்டுச் செல்வதே மிகச் சிறந்ததாகும்.

ஸஅதே! அல்லாஹ்வின் திருப்பொருத்தத்தை நாடியவராக நீர் செலவு செய்வது உனக்கு நற்கூலியைப் பெற்றுத் தரும். உன் மனைவிக்குக் கொடுக்கும் ஒரு கவள உணவு கூட நற்கூலியைப் பெற்றுத் தரும் செயலாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஸஅது இப்னு அபீவக்காஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இது மூன்றில் ஒரு பங்கு வஸிய்யத்' செய்யலாம் என்பதற்கு ஆதாரமாகும். மூன்றில் ஒரு பங்கைவிடக் குறைவாகவும் வஸிய்யத்' செய்யலாம். அதைவிட அதிகமாக வஸிய்யத்' செய்யக் கூடாது. அப்படிச் செய்தாலும் அது செல்லாது. இஸ்லாமிய நீதி மன்றம் அல்லது இஸ்லாமிய கூட்டமைப்பு அவ்வாறான வஸிய்யத்தை ரத்துச் செய்யும்.

இறைநம்பிக்கையாளர்களே! உங்களில் யாருக்கேனும் மரணம் நெருங்கி, அவர் மரண சாஸனம் கூற விரும்பினால் அச்சமயத்தில் நம்பிக்கைக்குரிய இரண்டு சாட்சிகள் இருக்கவேண்டும் அல்லது உங்களில் எவரும் பூமியில் பயணம் செய்து கொண்டிருக்கும்போது மரணம் நெருங்கினால் (அப்போது முஸ்லிம்களாக இரண்டு சாட்சிகள் இல்லையெனில்) உங்களை அல்லாத வேறு இருவர் சாட்சியாக இருக்கட்டும்..." (அல்குர்ஆன் 5:106)

ஒவ்வொருவருக்கும் அவரவர் உரிமைகளை அல்லாஹ் கொடுத்துள்ளான். சொத்துரிமை உள்ளவர்களுக்கு வஸிய்யத்' செய்யக் கூடாதும் என்று தம் கடைசி ஹஜ்ஜின்போது நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: அபூதாவூத், திர்மதி)

சொத்துரிமை உள்ளவருக்குச் சொத்து கிடைக்காத முறையில் வஸிய்யத்' செய்யக் கூடாது, வஸிய்யத்'தில் நீதத்தைக் கடைப் பிடிக்க வேண்டும்.

மரண சாஸனத்தில் வாரிசுகள் எவருக்கும் நஷ்டம் ஏற்படக் கூடாது என்று அல்லாஹ் குறிப்பிடுகிறான். (அல்குர்ஆன் 4:12)

தற்காலத்தில் மரண வேளையில் கூட பலவிதமான மார்க்கம் அனுமதிக்காத நூதனப் பழக்கங்கள் (பித்அத்துகள்) நடக்கின்றன. எனவே மரணிப்பவர் தன் மரணப் பயணம் மார்க்க நெறியில் - நபி(ஸல்) காட்டிய வழிமுறையில்தான் நடை பெறவேண்டும் என்று வஸிய்யத்' செய்வதும் அவசியமாகும்.

நான் இறந்து விட்டால் (அறியாமைக் கால முறைப்படி) யாருக்கும் அறிவித்து விடாதீர்கள். அது எனக்குத் துக்கம் கொண்டாடுவதாக அமைந்துவிடும். துக்கம் கொண்டாடுவதை நபி(ஸல்) அவர்கள் தடுத்துள்ளார்கள்" என ஹு தைஃபா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: திர்மிதீ)

மேற்கண்ட நிகழ்வுகள் நபித்தோழர்களில் பலர் மரண சாசனம் கூறி விட்டு மரணமடைந்துள்ளார்கள் என்பதை விளக்குகிறது.

முள் தைப்பது உட்பட, ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் கஷ்டங்கள், நோய், கவலை, துன்பங்கள், துயரங்கள், தொல்லைகள் ஆகிய ஒவ்வொன்றுக்கும் அவரின் பாவங்களிலிருந்து அல்லாஹ் அதைப் பகரமாக்கி அழிக்காது இருப்பதில்லை' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஸயீத் அல்குத்ரி மற்றும் அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் அஹ்மத்)

### நோயாளியை நலம் விசாரித்தல்

நோய்வாய்ப்பட்டவர்களுக்கும், துன்பங்களில் சிக்கிக் கொண்டவர்களுக்கும் ஆறுதல் கூறுவதும் அவர்களிடம் சென்று நலம் விசாரிப்பதும் நபிவழியாகும்.

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிம் செய்ய வேண்டிய கடமைகள்,

1. அவர் ஸலாம் சொன்னால் அதற்குப் பதில் ஸலாம் கூறுவது.

2. அவர் நோய் வாய்ப்பட்டால் நலம் விசாரிப்பது.

3. அவர் இறந்துவிட்டால் அவரின் ஜனாஸாவைப் பின்தொடர்ந்து சென்று, இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வது.

4. அவர் விருந்துக்கு அழைத்தால் அதை ஏற்றுக் கொள்ளுதல்.

5. அவர் தும்மி (அல்ஹம்துலில்லாஹ் என்று கூறி)னால், யர்ஹமுகல்லாஹ் என்ற கூறுதல் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், அஹ்மத் மற்றும் இப்னுமாஜா)

புகாரி, முஸ்லிமின் வேறுசில அறிவிப்புகளில் மேற்கண்டவற்றுடன் அநீதம் இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல், செய்த சத்தியத்தை அழகிய முறையில் நிறைவேற்றுதல் ஆகியவற்றை நபி(ஸல்) அவர்கள் எங்களுக்குக் கட்டளையிட்டுள்ளார்கள்“

யூதர்கள் மற்றும் கிருஸ்தவர்கள் மீது அல்லாஹ்வின் சாபம் உண்டாவதாக! அவர்கள் தங்கள் நபிமார்களின் மண்ணறைகளை வணங்கும் இடங்களாக ஆக்கிவிட்டார்கள் என்று நபி(ஸல்) அவர்கள் இறப்பதற்கு ஐந்து நாட்களுக்கு முன்னர் கூறினார்கள்“ (நூல்: புகாரி)

என்னுடைய கப்ரை (அடக்கஸ்தலத்தை) வணங்கப்படும் சிலை போன்று ஆக்கி விடாதீர்கள் என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: முஅத்தா இமாம் மாலிக்)

நபி(ஸல்) அவர்கள், இறப்பதற்கு ஓரிரு தினங்களுக்கு முன்பு தொழுகை பற்றி வலியுறுத்தினார்கள். பெண்களிடம் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்றும் கூறினார்கள்.

முள் தைப்பது உட்பட, ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் கஷ்டங்கள் மற்றும் நோய் போன்ற தொல்லைகள் ஆகியன எதற்கும் அவரின் பாவங்களிலிருந்து அல்லாஹ் அதைப் பகரமாக்கி அழிக்காமல் இருப்பதில்லைம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அபூஸயீத் அல் குத்ரீ மற்றும் அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் அஹ்மத்)

### நோய் விசாரித்தல்

நோய்வாய்ப்பட்டவர்களையும், துன்பங்களில் சிக்கிக் கொண்டவர்களையும் ஆறுதல் சொல்வதும் அவர்களைப் போய்ப்பார்ப்பதும் நபிவழியாகும்.

ஒரு முஸ்லிமுக்கு மற்றொரு முஸ்லிம் செய்ய வேண்டிய கடமைகள் ஐந்து.

1. அவர் ஸலாம்‘ சொன்னால் அதற்கு பதில் ஸலாம் கூறுவது

2. அவர் நோய் வாய்ப்பட்டால் நோய் விசாரிப்பது.

3. அவர் இறந்துவிட்டால் அவரின் ஜனாஸாவைப் பின் தொடர்ந்து சென்று, இறுதிச் சடங்குகளில் கலந்து கொள்வது.

4. அவர் விருந்துக்கு அழைத்தால் அதை ஏற்றுக் கொள்வது.

5. அவர் தும்மி (அல்ஹம்துலில்லாஹ் என்று கூறினால், யர்ஹமுகல்லாஹ் என்று கூறுவது' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" எனஅபூஹுரைர(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத் மற்றும் இப்னுமாஜா)

புகாரி மற்றும் முஸ்லிமின் சில அறிவிப்புகளில் மேற்கண்டவற்றுடன் அநீதம் இழைக்கப்பட்டவர்களுக்கு உதவி செய்தல், செய்த சத்தியத்தை அழகிய முறையில் நிறைவேற்றுதல் ஆகியவற்றை எங்களுக்கு நபி(ஸல்) அவர்கள் கட்டளையிட்டார்கள் என்றும் இடம்பெற்றுள்ளது.

ஆதமின் மகனே! நான் நோய்வாய்ப்பட்டிருந்தேனே, ஏன் என்னை நலம் விசாரிக்க நீ வரவில்லை? என்று அல்லாஹ் மறுமையில் (நோயாளியை நலம் விசாரிக்காத ஓர் அடியானைப் பார்த்துக்) கேட்பான். அதற்கு அவன், என்னைப் படைத்துப் பாதுகாப்பவனே! நீ இந்த அகில உலகங்களுக்கெல்லாம் அதிபதியாக இருக்கிறாய்! நீ எப்படி நோய்வாய்ப்பட முடியும்?" எனக் கேட்பான். அதற்கு, என்னுடைய இன்ன அடியான் நோய்வாய்ப்பட்டிருந்தான் என்பதை நீ அறியவில்லையா? ஏன் அவனை நலம் விசாரிக்க நீ வரவில்லை. அவனை விசாரிக்க நீ வந்திருந்தால் அங்கு என்னைக் கண்டிருப்பாய் என்பது உனக்குத் தெரியாதா?" என்று அல்லாஹ் கேட்பான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

மேற்கண்ட நபிமொழிகளின் மூலம் நோயாளியை நலம் விசாரித்தல், சிறப்புக்குரிய இறைவனுக்கு மிகப் பிரியமான ஒரு செயல் என்பதை அறியலாம்.

ஒரு முஸ்லிம் மற்றொரு முஸ்லிமான சகோதரனை நலம் விசாரிக்கச் சென்று அவர் திரும்பும் வரை சுவர்க்கத்தின் குர்ஃபாம் வில் இருக்கிறார் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது, இறைத்தூதர் அவர்களே! சுவர்க்கத்தின் குர்ஃபாம் என்றால் என்ன? என்று கேட்கப்பட்டதற்கு, அது சுவர்க்கத்தின் கொய்யப்பட்ட கனி வர்க்கங்கள்ம் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என தவ்பான்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

நோயாளியாக இருக்கும் ஒரு முஸ்லிமைக் காலையில் நலம் விசாரிக்கச் செல்லும் முஸ்லிமிற்காக அன்று மாலை வரை எழுபதாயிரம் வானவர்கள் பிரார்த்திக்கிறார்கள். அவர் மாலையில் நலம் விசாரிக்கச் சென்றால் அவருக்காக மறுநாள் காலை வரை எழுபதாயிரம் வானவர்கள் பிரார்த்தனை செய்வார்கள். சுவர்க்கத்தின் கனிகளும் அவருக்காக (மறுமையில்) கொடுக்கப்படும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டேன்" என அலி(ரலி) அறிவிக்கிறார். (நூல்: திர்மிதி, அபூதாவூத் மற்றும் இப்னுமாஜா)

### பிரார்த்தனை செய்ய வேண்டும்

நோய்வாய்ப்பட்டிருந்த என்னைப் பார்ப்பதற்காக நபி(ஸல்) அவர்கள் வந்தார்கள். அப்போது அவர்கள் தம் கரத்தை என் நெற்றியின் மீது வைத்துத் தடவினார்கள். பின்னர் என் நெஞ்சையும், வயிற்றையும் தடவினார்கள். பின்னர்,

அல்லாஹும்ம ஷ்ஃபீ ஸஅதன்" அல்லாஹும்ம ஷ்ஃபீ ஸஅதன், அல்லாஹும்ம ஷ்ஃபீ ஸஅதன் (பொருள்: யா அல்லாஹ்! ஸஅதை குணமாக்குவாயாக!) என்று பிரார்த்தித்தார்கள் என ஸஅத் இப்னு அபீவக்காஸ் (ரலி) அவர்களே அறிவிக்கிறார்கள் (நூல்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ மற்றும் திர்மிதி)

நோயாளியைப் பார்க்க செல்பவர்கள் அவர் நோய் நீங்க பிரார்த்திக்க வேண்டுமெனவும், நோய் விசாரிப்பவர்கள் நோயாளியின் காதில் விழும்படி சப்தமாகப் பிரார்த்திக்க வேண்டும் எனவும் விளங்குகிறது. அதனால் நோயாளிக்கு மிகுந்த மன ஆறுதலும் கிடைக்கலாம்.

நபி(ஸல்) அவர்களின் மனைவியர் நோய்வாய்ப் பட்டிருந்தால் நபி(ஸல்) அவர்கள், நோய் விசாரிக்க வரும்போது, தங்களின் வலது கரத்தால் தடவி, அல்லாஹு ம்ம ரப் பன்னாஸ், அத்தஹிபில் ப.:ஸ, வஷ்பிஹி அன்தஷ் ஷா.:பி, லாஷி.:பாஅ இல்லா ஷி.:பாவுகஷி.:பாஅன் லாயுகாதிரு ஸகமா (பொருள்: யா அல்லாஹ்! (உலக) மக்களைப் படைத்துப் பரிபாலிப்பவனே! இந்த துன்பத்தைப் போக்கி விடுவாயாக! நீயே (நோயை) குணப்படுத்துபவன், எனவே இவருக்குக் குணமளிப்பாயாக! (எங்களுக்கு) உன் நிவாரணத்தைத் தவிர வேறு நிவாரணமில்லை. எந்த ஒரு நோயையும் விட்டு வைத்திடாமல் முழு நிவாரணமளிப்பாயாக!)' என்று கூறுவார்கள்." என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

நபி(ஸல்) அவர்கள் ஒரு கிராமவாசியை நோய் விசாரிக்கச் சென்றார்கள். நபி(ஸல்) அவர்கள் நோய் விசாரிக்கச் செல்கையில்

ம்லா ப.:ஸ தஹு ருன் இன்ஷா அல்லாஹ்' (பொருள்: கவலைப்படாதே, அல்லாஹ் நாடினால் உன் பாவங்களையும், துன்ப துயரங்களையும் அழித்துவிடுவான்) என்று கூறுவதை வழமையாகக் கொண்டிருந்தனர் என, இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி)

### நோயாளியின் குடும்பத்தாரிடம் விசாரிக்கலாம்

நோயாளியைப் பார்க்க முடியாதபோது, நோயாளியின் குடும்பத்தாரிடம் கூட, அது பற்றி விசாரிப்பது ஆகுமானதே.

நபி(ஸல்) அவர்கள் மரணதருவாயில் நோயுற்று இருந்தபோது அவர்கள் இருக்கும் இடத்திலிருந்து வெளியேறிய அலீ(ரலி) அவர்களிடம் அபுல் ஹஸனே! (அலீ(ரலி) அவர்களின் பெயர்) நபி(ஸல்) அவர்கள் எவ்வாறு இருக்கிறார்கள்? என்று மக்கள் கேட்டனர். அதற்கு அல்லாஹ்வின் உதவியால் நலமாகவே இருக்கிறார்கள் என்று அலீ(ரலி) கூறினார்கள்" என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி)

### நோயாளி, பெண்ணாக இருந்தாலும் விசாரிக்கலாம்

நபி(ஸல்) அவர்கள் என்னை நோய் விசாரிக்க வந்தார்கள். அப்போது உம்முல் அலா.:வே, நற்செய்தி பெறுவீராக! என்று கூறி, (பழுக்கச் காய்ச்சுவதன் மூலம்) வெள்ளியிலுள்ள அழுக்கை நெருப்பு போக்கிவிடுவது போல, ஒரு முஸ்லிமுக்கு ஏற்படும் நோயின் காரணமாக அவரின் பாவங்களை அல்லாஹ் அழித்துவிடுகிறான்" என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என்று உம்முல் அலா.:(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: அபூதாவூத்)

நபி(ஸல்) அவர்கள் உம்முஸ்ஸாயிப்(ரலி) இருக்குமிடம் வந்தார்கள். (அவர்கள் பரபரப்பாக இருப்பது கண்டு) ஏன் பரபரப்பாக திடுக்கத்துடன் காணப்படுகிறாய்?" எனக் கேட்டார்கள். அதற்கு அவர்கள், காய்ச்சல் அடிக்கிறது, காய்ச்சலை அல்லாஹ் ஒழிப்பானாக!" எனத் திட்டினார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள், காய்ச்சலைத் திட்டாதீர்கள்! ஏனெனில் இரும்பிலுள்ள துருவைத் துருத்தி அகற்றுவது போல, ஆதமுடைய மகனின் பாவங்களை நோய் அகற்றிவிடுகிறது" என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

அன்ஸாரிகளிலிருந்து ஒருவர் பள்ளிவாசலிலேயே தங்கியிருப்பார். அவர் நோய்வாய்ப்பட்டிருந்தபோது, அவரை உம்முத்தர்தா(ரலி) அவர்கள் நோய் விசாரித்தார்கள் என, ஹாரிஸ் இப்னு உபை அல்துல்லாஹ் அன்சாரி அறிவிக்கிறார்கள். இந்தச் செய்தி புகாரி இமாம் அவர்களின் அல்அதபுல் மு.:ப்ரத்' எனும் தொகுப்பில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

எனவே, மேற்கண்ட ஹதீஸ்களிலிருந்து ஆண்களும், பெண்களும் ஒருவரை மற்றொருவர் நோய் விசாரிக்கலாம் என, அறிய முடிகிறது. எனினும் நபி(ஸல்) தம் தகுதியின் அடிப்படையில் அப்பெண்களை நோய் விசாரிக்கச் சென்றிருக்கிறார்கள். பொதுவாகப் பெண்களுடன் பேசுவது, தனித்திருப்பது போன்ற செயல்களுக்கு ஹதீஸ்களில் தடை வந்துள்ளதால் அதையெல்லாம் கருத்தில் கொண்டே இந்த ஹதீஸ்களையும் நாம் அனுக வேண்டும்.

யூதர்கள், கிறிஸ்தவர்கள், இறைநிராகரிப்பாளர்கள் போன்றவர்களின் மரண வேளையில் ஒரு முஸ்லிம் அங்கே இருக்கலாம். அப்போது மரண வேளையில் இருப்பவரிடம் இஸ்லாத்தை எடுத்துக் கூற வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் தம் பெரிய தந்தை அபூதாலிப் அவர்களுக்கு மரண வேளை வந்துவிட்டபோது அங்கே சென்றார்கள். அவரருகே அபூஜஷ்ல், அல்துல்லாஹ் இப்ன அபீ உமய்யா இப்னி முகர்கீரா ஆகியோர் இருந்தனர் அப்போது நபி(ஸல்) என் பெரிய தந்தையே! லாயிலாஹ இல்லாஹ் (வணக்கத்திற்குரியவன் அல்லாஹ்வைத் தவிர வேறு யாருமில்லை) என்று சொல்லுங்கள். இந்தச் சொல்லை முன்வைத்து நான் உங்களுக்காக அல்லாஹ்விடம் வாதாடுவேன்ம் என்று சொன்னார்கள். அப்போது அபூஜஹ்லும், அப்துல்லாஷ் பின் அபீ உமய்யாவும், அபூதாலிபே! நீங்கள்(உங்கள் தந்தை) அப்துல்முத்தலிபின் மார்க்கத்தை வெறுத்து ஒதுக்கப் போகிறீர்களா என்று கேட்டனர். நபி(ஸல்) அவர்கள் ஏகத்துவ உறுதிமொழியைக் கூறும்படி அபூதாலிபை வற்புறுத்திக் கொண்டேயிருந்தார்கள். அவ்விருவரும் அவரைத் தடுத்துக் கொண்டேயிருந்தனர் இறுதியில் அபூதாலிப் கடைசியாக :நான் என் தந்தை அப்துல் முத்தலிபின் மார்க்கத்திலேயே இருக்கிறேன் என்றார். லாயிலாஹ இல்லல்லாஹ் எனும் உறுதிமொழியைச் சொல்ல மறுத்து விட்டார். அப்போது நபி(ஸல்) அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாக! எனக்குத் தடை விதிக்கப்படும் வரை உங்களுக்காக நான் பாவமன்னிப்பு கேட்டுக் கொண்டேயிருப்பேன் என்று சொன்னார்கள். அப்போதுதான் இணைவைப் போருக்காகப் பாவமன்னிப்புக் கோர இறைத்தூதருக்கும், இறை நம்பிக்கை கொண்டோருக்கும் உரிமையில்லை என்ற ( 9:113வது) வசனத்தை அல்லாஹ் இறக்கியருளினான். மேலும் அபூதாலிப் விஷயமாக (நபியே) நீர் விரும்பியவர்களை நேர்வழியில் செலுத்திவிட முடியாது. மாறாக அல்லாஹ் தான் நாடியவர்களை நேர்வழியில் செலுத்துகிறான் எனும் (28:56 வது) வசனத்தை இறக்கியிருளினான்.“ என முஸய்யப் இப்னு ஹஸன்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி)

ஒரு யூதச் சிறுவன் நபி(ஸல்) அவர்களுக்குப் பணிவிடைகள் செய்து கொண்டிருந்தான். அவன் நோய்வாய்ப்பட்டபோது நபி(ஸல்) அவர்கள் அவனை நோய் விசாரிக்கச் சென்றார்கள். அவனுடைய தலைமாட்டில் உட்கார்ந்து கொண்டு, இஸ்லாத்தில் சேர்ந்துவிடு! என்றார்கள். அப்போது அவன் அவனுக்குப் பக்கத்தில் இருந்த தன் தந்தையைப் பார்த்தான். அவனுடைய தந்தை, நபி(ஸல்) அவர்களின் சொல்லுக்குக் கட்டுப்படு என்று கூற அவன் இஸ்லாத்தில் இணைந்து விட்டான்.

நரகத்திலிருந்து இவனைக் காப்பாற்றிய அல்லாஹ்வுக்கே எல்லாப்புகழும் என்று கூறிக் கொண்டே நபி(ஸல்) அவர்கள் வெளியேறினார்கள் என அனஸ்(ரலி) அறிவிக்கிறார் (நூல்: புகாரி, அபூதாவூத்)

இறைவனால் படைக்கப்பட்டவன் மனிதன் என்பதால் அவன் இறந்த பின்பும், மதிப்பிற்கும், மரியாதைக்கும் உரியவனே என்று இஸ்லாம் கூறுகிறது.

இறந்துவிட்டவர்களைத் திட்டாதீர்கள். ஏனெனில், அவர்கள் என்னென்ன செய்தார்களோ அத(ன் பல)னை அவர்கள் அடைந்துவிட்டார்கள். (நபிமொழி) அறிவிப்பவர்: ஆயிஷா(ரலி) (நூல்: அஹ்மத், புகாரி, நஸயீ)

எனவே, ஒரு மனிதன் இறந்த பின்பும்கூட அவனுடைய மானம், மரியாதைக்கு இழுக்கு ஏற்பட இஸ்லாம் அனுமதிப்பதில்லை.

## மரணப் பிடியில்

உலகில் மனிதன் வாழும்போது பல தவறுகளைச் செய்திருப்பான். இறைவ னுக்கு இணைவைக்கிற செயல்களைக் கூட செய்திருப்பான். ஒரு மனிதனின் இறுதி முடிவைப் பொறுத்தே அவனுடைய நிலை தீர்மானிக்கப்படுவதால் அவன் மரணமாகும்போது பாவமற்றவனாக மரணிக்க வேண்டும்.

ஓர் அடியான் நரகத்திற்குச் செல்லும்படியான காரியங்களையே செய்து கொண்டிருப்பான். ஆனால் (இறுதியில்) அவன் சுவர்க்கவாசியாக மாறிவிடக் கூடும். ஒருவன் சுவர்க்கத்திற்குச் செல்லும் காரியங்களையே செய்து கொண்டிருப்பான். ஆனால் இறுதியில் அவன் நரகவாசியாக மாறிவிடக்கூடும். எனவே செயல்கள் அனைத்தும் அவனுடைய இறுதி முடிவைப் பொறுத்தே அமைகின்றன' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஸஹ்ல் இப்னு ஸஅத்(ரலி) அறிவிக்கிறார், (நூல்: புகாரி, முஸ்லிம்)

தொழுகை, நோன்பு, தான தருமங்கள் போன்ற நல்ல அமல்களைச் செய்து கொண்டிருப்பவன், நாம்தான் நல்ல அமல்களைச் செய்து கொண்டிருக்கிறோமே!' என இறுமாப்போடு இருந்து விடக்கூடாது. இறைவனிடம் பாவமன்னிப்புத் தேடிக் கொண்டே இருப்பதுடன் இறுதி முடிவு நன்கு அமைவதற்கு பிரார்த்தித்தவாறு இருக்கவேண்டும்.

லாயிலாஹ இல்லல்லாஹ்' (வணங்கத் தகுதியுடையவன் அல்லாஹ் ஒருவனைத் தவிர யாருமில்லை) என்று நன்றாக விளங்கிய நிலையில் ஒருவன் மரணித்தால் அவன் சுவர்க்கத்தில் நுழைந்துவிட்டான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உஸ்மான்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

லாயிலாஹ இல்லல்லாஹ்' என்பது ஒருவரின் கடைசி வார்த்தையாக அமைந்துவிட்டால் அவர் சுவர்க்கத்தில் நுழைந்துவிட்டார்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என முஆத்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: அபூதாவூத், அஹ்மத்)

முஸ்லிமாக இருக்கும் ஒருவர் மரணிக்கும்போது கலிமா'ச் சொன்ன நிலையில் மரணிக்க வேண்டும். இதற்கு விளக்கமாக,

உங்களில் மரணப்பிடியில் இருப்பவர்களுக்கு லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று சொல்லிக்கொடுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா மற்றும் அபூஸயீத் அல்குத்ரீ(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: முஸ்லிம், திர்மிதி, அபூதாவூத், இப்னுமாஜா மற்றும் நஸயீ)

லாயிலாஹ இல்லல்லாஹ்' என்று சொல்! சொல்!! எனச் சொல்லிக் கொடுக்கக் கூடாது. ஏனெனில் அப்படிச் சொல்லிக் கொடுக்கும்போது மரண வேதனையில் இருப்பவர் அதைச் சொல்ல மறுத்துவிட்டால் இறைமறுப்பாளராக மரணிக்கின்ற சசூழ்நிலை ஏற்படும் அபாயம் இருக்கிறது. எனவே அப்படிச் சொல்லிக் கொடுக்காமல் அவர் பக்கத்தில் இருந்து மற்றவர்கள் லாயிலாஹ இல்லல்லாஹ்' சொல்ல வேண்டும். அதைச் செவியுற்று அவரும் சொல்வார் என்று சிலர் கூறுகின்றனர். இது தவறான விளக்கமாகும். மேற்கண்ட ஹதீஸில் லக்கினூ' என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளது. அதற்குச் சரியான பொருள், புரியவையுங்கள்' ஆர்வமூட்டுங்கள்' என்பதாகும். சொல்லிக் கொடுங்கள்' என்பது அல்ல.

## பொறுமையின் பரிசு

இறப்புச் செய்தியைக் கேட்டவுடன் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்' என்று கூற வேண்டும்.

நிச்சயமாக நாம் உங்களை ஓரளவு அச்சத்தாலும், பசியாலும், பொருட்கள், உயிர்கள், விளைச்சல்கள் ஆகியவற்றின் இழப்பினாலும் சோதிப்போம். ஆனால் பொறுமையுடையோருக்கு (நபியே நீர்) நற்செய்தி கூறுவீராக! (பொறுமை யுடையோராகிய) அவர்களுக்குத் துன்பம் ஏற்படும்போது, இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன்' (பொருள்: நிச்சயமாக நாம் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், நிச்சயமாக நாம் அவனிடம் திரும்பிச் செல்வோம்) என்று கூறுவார்கள்." (அல்குர்ஆன் 2:155,156)

ஒரு முஸ்லிமுக்கு சோதனை துன்பம் ஏற்பட்டு அவன் இன்னாலில்லாஹி வ இன்னா இலைஹி ராஜிவூன் அல்லாஹு ம்ம அஜிர்னீ ஃபீ முஸீபதீ வக்லு ஃப்லீ கைரன் மின்ஹா" (பொருள்: நிச்சயமாக நாங்கள் அல்லாஹ்வுக்கே உரியவர்கள், உறுதியாக நாங்கள் அவனிடமே திரும்பச் செல்வோம். யா அல்லாஹ்! துன்ப துயரத்திற்கு எனக்கு நற்கூலி வழங்குவாயாக! இந்த துன்பத்தைப் போக்கி அதைவிடச் சிறந்த நன்மையைத் தருவாயாக!) என்று சொன்னால் அல்லாஹ் அவனுடைய துன்பத்தை நீக்கிச் சிறந்த கூலியை வழங்குகிறான். அந்த துன்பத்தைப் போக்கி நல்லதை ஏற்படுத்துகிறான் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என உம்மு ஸலமா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

என் கணவர் அபூஸல்மா(ரலி) மரணித்தபோது நபி(ஸல்) அவர்கள் எனக்குக் கட்டளையிட்டபடி மேற்கண்ட வார்த்தையைச் சொன்னேன். எனவே எனக்கு அல்லாஹ் அவரை விடச் சிறந்த நபி(ஸல்) அவர்களை (அவருக்குப் பின்னர்) கணவராக அடையும் பாக்கியத்தை வழங்கினான்" என உம்மு ஸல்மா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம், அஹ்மத் மற்றும் இப்னுமாஜா)

ஒரு பெண்ணின் மூன்று பிள்ளைகள் மரணமடைந்து விட்டால் அப்பிள்ளைகள் அவளை நரகத்திற்குச் செல்ல விடாமல் திரையாக நிற்பார்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதைக் கேட்ட ஒரு பெண், இரண்டு குழந்தைகள் மரணித்தால்?ம் என்று கேட்டாள். அதற்கு நபி(ஸல்) அவர்கள், இரண்டு குழந்தை கள் இறந்தாலும் அப்படியே' என்று கூறினார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம்)

(தாய்தந்தை ஆகிய) இரண்டு முஸ்லிம்களுக்குப் பருவமடையாச் சிறுகுழந்தைகள் மரணித்து விட்டால் அக்குழந்தைகளையும், அவர்களின் பெற்றோர்களையும் அல்லாஹ் தன் பேரருளினால் சுவர்க்கத்தில் நுழையச் செய்கிறான். அக்குழந்தைகள் சுவர்க்கத்தின் வாசலில் நின்று கொண்டிருப்பார்கள். சுவர்க்கத்தில் நுழையுங்கள்' என்று அவர்களிடம் கூறப்பட்டால், அப்போது அவர்கள், எங்கள் பெற்றோர் இல்லாமல் முடியாதும் என்பார்கள். நீங்களும் உங்கள் பெற்றோர்களும் சுவர்க்கத்தினுள் நுழையுங்கள்ம் என்று கூறப்படும். (நூல்: நஸயி,ஸைஹகீ)

கஷ்டம், துன்பம் ஏற்படும்போது பொறுமையை மேற்கொண்டு குர்ஆனின் கட்டளைக்கிணங்க இன்னாலில்லாஹி...' என்று சொல்பவர்களுக்கு அல்லாஹ் அந்த துன்பத்தைப் போக்கி நன்மையை வழங்குகிறான் என்பதை மேற்கண்ட நபிமொழிகளின் மூலமாக அறியலாம்.

### சோகத்தை வெளிப்படுத்தும் முறைகள்

பற்றும், பாசமும் கொண்டிருக்கக் கூடிய மனைவி, மக்கள் உற்றார், உறவினர் ஆகியோரில் யாரேனும் மரணித்துவிடும்போது மனிதன் கவலையிலும், துன்பத்திலும் மூழ்கிவிடுவது இயற்கையே!

அவ்வேளையில், அவன் தன் சோகத்தினால் அழுகிறான், புலம்புகிறான், ஓலமிடுகிறான், இவ்விஷயத்தில் பெண்கள் மிகவும் எல்லை மீறி நடந்து கொள்கின்றனர். படைத்த இறைவனையே திட்டுகின்றனர். முகத்திலும், கன்னங் களிலும் அடித்துக்கொண்டு அழுகின்றனர். ஆடைகளைக் கிழித்துக் கொள்கின்றனர். இப்படியெல்லாம் செய்யலாமா?

### கண்ணீர் விட்டு அழலாம்

சோகத்தை வெளிப்படுத்தும் முறைகளில் கண்ணீர் விட்டு அழலாம் என்பதைப் பின்வரும் நபிவழிகள் தெரிவிக்கின்றன.

1. நபி(ஸல்) அவர்களின் மகனார் இப்ராஹீம்(ரலி) மரனிக்கும் தருவாயில் நபி(ஸல்) அவர்கள் இப்ராஹீமைத் தூக்கி முத்தமிட்டார்கள். நுகர்ந்தார்கள். பின்னர். இப்ராஹீம்(ரலி)யின் உயிர் பிரிந்து கொண்டிருந்தது. நபி(ஸல்) அவர்களின் இரண்டு கண்களும் கண்ணீரைச் சிந்தின. அப்போது அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப்(ரலி) அவர்கள், இறைத்தூதர் அவர்களே! தாங்களுமா? (அழுகின்றீர்கள்) என (வியப்புடன்) கேட்டார். அதற்கு, அவ்ஃபின் மகனே! இது கருணையாகும்! என்று கூறிவிட்டு கண்கள் கண்ணீரைச் சொரிகின்றன. உள்ளம் மிகவும் வருந்துகின்றது. என்றாலும் எங்கள் இறைவன் பொருந்திக் கொள்ளாத வார்த்தைகளை நாம் சொல்லமாட்டோம், இப்ராஹீமே! உன் பிரிவால் நாங்கள் பெரும் கவலையில் இருக்கிறோம்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத் மற்றும் இப்னுமாஜா)

•2. நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருந்தபோது அவர்களின் மகளார் ஜைனப்(ரலி)யின் ஆண் குழந்தை மரண வேளையில் இருப்பதாகவும் அதனால் நபி(ஸல்) அவர்களை அழைத்ததாகவும் ஒருவர் வந்து சொன்னார். அதற்கு நபி(ஸல்) அவர்கள், நீ சென்று ஸலாம்‘ கூறு. நிச்சயமாக அல்லாஹ் எதை எடுத்துக்கொண்டானோ அதுவும் அவனுடையதே. அல்லாஹ்விடத்திலே ஒவ்வொன்றுக்கும் ஒரு குறிப்பிட்ட தவணைக் காலம் இருக்கிறது. எனவே (இறைவனின்) வெகுமதியை எதிர்பார்த்துப் பொறுமையாக இருக்கச் சொல்!‘ என்று சொல்லி அனுப்பினார்கள்.

அவர் சென்று மீண்டும் வந்து, தாங்கள் கட்டாயம் வந்தே ஆக வேண்டும் என தங்கள் மகளார் சத்தியம் செய்து சொல்கிறார் என்றார்.

அதன் பின்னர் நபி(ஸல்) அவர்களும் ஸஅத் இப்னு உபாதா(ரலி), முஆத் இப்னு ஜபல்(ரலி) மற்ற சிலரும் சென்றனர். (அவர்களுடன்) நானும் சென்றேன். நபி(ஸல்) அவர்களிடம் அக்குழந்தை கொண்டு வரப்பட்டது.

தோல்பை போன்று அக்குழந்தையின் உயிர் ஊசலாடிக் கொண்டிருந்தது. நபி(ஸல்) அவர்களின் இரண்டு கண்களிலிருந்தும் கண்ணீர் வழிந்தோடியது. அப்போது ஸஅத் இப்னு உபாதா(ரலி) அவர்கள், இறைத்தூதர் அவர்களே! என்ன இது? (ஏன் அழுகிறீர்கள்?) என்று கேட்டதற்கு, இது இறைவன் தன் அடியார்களின் உள்ளத்தில் ஏற்படுத்தியுள்ள இரக்க குணத்தின் வெளிப்பாடாகும். இத்தகைய இரக்கச் சிந்தனை உள்ளவர்களுக்கு அல்லாஹ் அருள் புரிகிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்தார்கள்“ என உஸாமா இப்னு ஸைத்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம் மற்றும் அஹ்மத்)

3. ஸஅத் இப்னு உபாதா(ரலி) கடுமையாக நோய் வாய்ப்பட்டு விட்டார். நபி(ஸல்) அவர்களுடன், அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ஃப், ஸஅத் இப்னு அபீவக்காஸ் அப்துல்லாஹ் இப்னு மஸ்வூத்(ரலி) ஆகியோர் அவரை நோய் விசாரிக்கச் சென்றனர். அவர் மூச்சற்றவராகக் கிடந்தார்.

அப்போது நபி(ஸல்) அவர்கள், இவர் இறந்துவிட்டாரோ என்று கேட்க அங்கிருந்தோர் இல்லை இறைத்தூதர் அவர்களே!‘ என்றனர். நபி(ஸல்) அவர்கள் அழுதார்கள். அவர்கள் அழுவதைப் பார்த்து அங்கிருந்தோரும் அழுதனர்.

ம்நிச்சயமாகக் கண்ணீர் வடிப்பதாலோ உள்ளம் வருந்துவதாலோ அல்லாஹ் (மனிதர்களை) வேதனைப் படுத்துவதில்லை. மாறாக இதன் காரணத்தால்தான் அல்லாஹ் வேதனை செய்கிறான்

அல்லது அருள்புரிகிறான் என்று கூறி, நபி(ஸல்) அவர்கள் தம் நாவைச் சுட்டிக்காட்டினார்கள்" என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம் மற்றும் அஹ்மத்)

மேற்கண்ட மூன்று ஹதீஸ்களும் துன்ப துயரங்களில் கண்ணீர் விட்டு அழ அனுமதிக்கின்றன.

சோகத்தை வெளிப்படுத்துவதற்கு ஒரு வரம்பு உண்டு.

இறந்த மய்யித்துக்காக கண்ணீர் விட்டு அழக்கூடாது என்ற கருத்திலும் பல நபிமொழிகள் உள்ளன.

4. மய்யித்தின் குடும்பத்தார் அழும் காரணத்தால் அந்த மய்யித் கப்ரில் வேதனை செய்யப்படுகிறது என்று நபி(ஸல்) கூறியுள்ளனர்" என உமர்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் நஸயீ)

5. இதே வாசகங்கள் அடங்கிய மற்றொரு நபிமொழி இப்னு உமர்(ரலி) வாயிலாக புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. மேற்கண்ட இரண்டு (4,5) நபிமொழிகளும் இறந்தவருக்காக அழக்கூடாது என அறிவிக்கின்றன.

உயிருள்ளவர்கள் அழும் காரணத்தால் மய்யித் வேதனை செய்யப்படுகிறது" என்ற நபிமொழியைப் பற்றி அன்னை ஆயிஷா(ரலி) அவர்களிடம் தெரிவிக்கப் பட்டபோது, நபி(ஸல்) அவர்கள் அப்படிக் கூறவே இல்லை என்று மறுத்து,

அந்த மய்யித் (உலகில் வாழும்போது) செய்த குற்றங்களின் காரணமாகவும், பாவங்களின் காரணமாகவும் வேதனை செய்யப்படுகிறது. இங்கே அதன் குடும்பத்தினர் இப்போது அழுது கொண்டிருக்கிறார்கள் என்றுதான் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என தெரிவித்தார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

அதாவது மய்யித் வேதனை செய்யப்படுவதற்கும், குடும்பத்தினர் அழுவதற்கும் சம்பந்தமில்லை. கப்ரில் அது வேதனைப்படுத்தப்படுகிறது. இங்கே இவர்கள் அழுது கொண்டிருக்கிறார்கள். இவர்கள் அழும் காரணத்தால் வேதனை செய்யப்படுவதில்லை என்பதே இந்த நபிமொழியின் விளக்கமாகும்.

அழக்கூடாது என்ற கருத்தில் காணப்படும் நபிமொழிகள் கண்ணீர் விடுவதையும், சப்தமின்றி அழுவதையும் குறிப்பிடவில்லை. மாறாக ஒப்பாரி வைத்து, மார்க்கம் அனுமதிக்காத வார்த்தைகளைச் சொல்லி அழுவதையே குறிப்பிடுகின்றன என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும்.

ஏனெனில் நபி(ஸல்) அவர்கள், தம் மகன் இப்ராஹீம் மற்றும் தம் மகள் ஜைனப்(ரலி) குழந்தையின் மரணித்தபோதும் கண்ணீர் விட்டு அழுதிருக்கிறார்கள்.

அது மட்டுமின்றி அழுவதால் மய்யித் வேதனை செய்யப்படுகிறது என்ற நபிமொழியை அறிவிக்கும் இப்னு உமர்(ரலி) 3வது நபிமொழியில் கண்ணீர் வடித்து அழுவதால் வேதனை செய்யப்படுவதில்லை. மாறாக நாவின் காரணத்தால் தான் வேதனை செய்யப்படுகிறது என்பதையும் அறிவிக்கிறார்.

அழும் காரணத்தால் மய்யித் வேதனை செய்யப்படுகிறது என அறிவிக்கும் இப்னு உமர்(ரலி) அவர்களே காலித் இப்னு வலீத்(ரலி) இறந்தபோது அவரின் உறவுக்காரப் பெண்கள் அழுதனர். அப்போது தலையில் மண்ணை வாரிப் போடாமலும், ஒப்பாரி வைக்காமலும் இருக்கும் வரை அப்பெண்களை அழவிடுங்கள் எனக் கூறியுள்ளார் (நூல்: புகாரி)

இக்கருத்தை வலியுறுத்தும் வகையில் அமைந்துள்ள மற்ற சில நபிமொழிகளையும் பார்ப்போம்.

உள்ளத்தாலும், கண்களாலும் சோகத்தை வெளிப்படுத்துவது இறைவன் புறத்திலிருந்து உள்ளதாகும். கைகளாலும், நாவாலும் சோகத்தை வெளிப்படுத்து வது ஷைத்தானின் வேலையாகும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: அஹ்மத்)

(துன்பங்கள் நிகழும்போது) கன்ன(முக)த்தில் அடித்துக்கொள்பவனும், சட்டையைக் கிழித்துக்கொள்பவனும், அறிவீனமான வார்த்தைகளால் கூக்குரலிடு பவனும் நம்மைச் சார்ந்தவன் அல்லன்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்." என இப்னு மஸ்வூத்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் நஸயீ)

ஆக, அழுவதால் மய்யித் வேதனை செய்யப்படும் என்பதன் கருத்து, நாவால் கூறத்தகாத வார்த்தைகளைக் கூறிக் கைகளால் சட்டைகளைக் கிழித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழுவதுதான் என்பதை மேற்கண்ட நபிமொழிகள் தெளிவாகவே உணர்த்துகின்றன. எனவே துன்ப துயரங்களின் போது கண்ணீர் வடிக்கலாம் என்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும். இனி ஒப்பாரி வைத்து அழுவது கூடாது என்ற கருத்தில் வரக்கூடிய இன்னும் சில ஆதாரங்களைக் காண்போம்.

1. அபூ மூஸா(ரலி) அவர்கள் நோய்வாய்ப்பட்டு மயக்கத்தில் இருந்தபோது அவரின் தலை அவரின் மனைவியருள் ஒருவர் மடியில் இருந்தது. அப்பெண் கூக்குரலிட்டு அழ ஆரம்பித்தார். அவர் (மயக்க நிலையில் இருந்ததால்) தம் மனைவியைக் கண்டித்துப் பதில் சொல்ல முடியவில்லை. அவருக்கு மயக்க நிலை மாறியபோது, துன்பங்களினால் ஒப்பாரி வைத்து அழுபவள், துயரங்களில் தன் தலையைச் சிரைத்துக் கொள்பவள், தன் ஆடைகளைக் கிழித்துக்கொள்பவள் ஆகியவர்களை விட்டும் நபி(ஸல்)அவர்கள் நீங்கிக் கொண்டதாகக் கூறினார்கள். ஆகவே அத்தகையவர்களை விட்டு நானும் நீங்கிக் கொண்டேன். (அதாவது என் மனைவியின் இச்செயலுக்கும், எனக்கும் எவ்விதச் சம்பந்தமுமில்லை) எனக் கூறினார்" என அபூதர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத், நஸயீ)

2. நபி(ஸல்) அவர்கள் எங்களிடம் உறுதிமொழி (பைஅத்) வாங்கியபோது, நாங்கள் (மய்யித்திற்காக) ஒப்பாரி வைத்து அழக்கூடாது" எனவும் உறுதிமொழி வாங்கினார்கள்" என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத் மற்றும் நஸயீ)

3. அப்துல்லாஹ் இப்னு ரவாஹா(ரலி) மயக்கமுற்றபோது அவரின் சகோதரி அழ ஆரம்பித்து மலையே! (மலை போன்றவரே!) அப்படியானவரே! இப்படியானவரே! என்று அடுக்கிக்கொண்டே போனார். அவர் மயக்கம் தெளிந்து எழுந்தபோது நீ எதைச் சொல்லி அழுதாயோ அப்போதெல்லாம் நீ அப்படிப்பட்டவனா! என்று என்னிடம் கேட்கப்படாமல் இல்லை என்றார். பின்னர் அவர் இறந்தபோது அவரின் சகோதரி (இவ்வாறு சொல்லி) அழவில்லை" என நுஃமான் இப்னு பஷீர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

எனவே ஒரு மனிதர் இறந்த பின்பு அவருக்கு இல்லாத சிறப்புக்களை எல்லாம் சொல்லி அழக்கூடாது. சட்டைகளைக் கிழித்து கன்னத்திலடித்துக் கொண்டு ஒப்பாரி வைத்து அழக்கூடாது. மொட்டை அடித்துக் கொள்ளக் கூடாது தலைமுடியைப் பெண்கள் விரித்துக் போட்டு அழக்கூடாது ஆகியவற்றை அறிந்துகொள்கிறோம். ஆனால் அதே நேரத்தில் கண்ணீர் விட்டு அழலாம். இறைவன் பொருந்திக்கொள்ளத்தக்க வார்த்தைகளைக் கூறலாம் என்பதைக் கண்டோம். அவருக்கு உள்ள சிறப்புக்களைக் கூறி கண்ணீர் வடிக்கலாம் என்பதைப் பின்வரும் நபிமொழிகள் விளக்குகின்றன.

நபி(ஸல்) அவர்கள் இறந்த பின்பு அபூபக்ர் ஸித்தீக்(ரலி) அவர்கள் அங்கே வந்து, தம் வாயை நபி(ஸல்) அவர்களின் இரண்டு கண்களுக்கு மத்தியில் வைத்த (வாறு முத்தமிட்ட)னர். தம் இரண்டு கரங்களையும் கொண்டு இரண்டு நெற்றிப் பொட்டையும் பிடித்து (உயிர் உள்ளதா எனப்) பார்த்தனர்.

பின்பு நபியே! என் தோழரே! தேர்ந்தெடுக்கப்பட்ட நபியே! என்று கூறினார்கள்“ என அனஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: அஹ்மத்)

## மரண தருவாயில் இருப்பவருக்கு செய்ய வேண்டியவை

அபூஸல்மா(ரலி) அவர்களின் மரண நேரத்தில் அவரின் கண்கள் திறந்தவாறு இருந்தது அப்போது அங்கு வந்த நபி(ஸல்) அவர்கள் அவரின் கண்களைக் கசக்கி மூடினார்கள். பின்னர், உயிர் கைப்பற்றப்பட்டுவிட்டால் பார்வை அதைப் பின்தொடர்கிறது“ என்று கூறினார்கள். அப்போது அபூஸல்மா வின் வீட்டார் அழ ஆரம்பித்தனர். அதைக் கண்ட நபி(ஸல்) அவர்கள், உங்களுக்கு எதிராக நல்லதைத் தவிர வேறு எதையும் கேட்காதீர்கள், ஏனெனில், (இப்போது) வானவர்கள் நீங்கள் சொல்வதற்கெல்லாம் ஆமீன்‘ கூறுகிறார்கள்‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டுப் பின்வருமாறு பிரார்த்தித்தார்கள்.

யா அல்லாஹ்! அபூஸல்மாவை மன்னிப்பாயாக! நேர்வழி பெற்றவர்களிலே அவரின் தகுதியை உயர்த்துவாயாக! அவர் சென்ற பின்பு அவருக்காக நல்லதொரு பின் தோன்றலை இங்கிருப்போரில் ஏற்படுத்துவாயாக! அகில உலகங்களின் இறைவனே! எங்களையும், அவரையும் மன்னிப்பாயாக. அவரின் மண்ணறையை (கப்ரை) விசாலப்படுத்துவாயாக! அதிலே அவருக்கு ஒளியை ஏற்படுத்துவாயாக! என்று பிரார்த்தித்தார்கள்“ என உம்மு ஸல்மா(ரலி) (நூல்: அஹ்மத், இப்னுமாஜா மற்றும் முஸ்லிம்)

எனவே, இறந்தவரின் குடும்பத்தாருக்காக நல்லவற்றை வேண்டிப் பிரார்த்திக்க வேண்டும். அங்கு தேவையற்ற வார்த்தைப் பிரயோகம் கூடாது.

மரணமானவுடன் அந்த உயிர் செல்வதை கண்கள் பார்த்துக் கொண்டு இருப்பதால் பார்வை அதைப் பின்பற்றும், எனவே இறந்தவுடன் கண்கள் திறந்த நிலையில் அவலமாகக் காட்சியளிக்கும், அதனால் கண்களை உடனே கசக்கி மூடிவிட வேண்டும்.

## மூடி வைக்க!

இறந்தவுடன் ஏற்கனவே உடுத்தியிருந்த ஆடைகளை அகற்றி மய்யித்தை மலஜலங்களை விட்டு சுத்தப்படுத்தி அதைத் துணியால் மூடி வைக்க வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் மரணமானபோது அபூபக்ர்(ரலி) அவர்கள் அங்கே வந்தார்கள். நபி(ஸல்) அவர்களின் உடல் யமன் நாட்டு கோடுகளிட்ட போர்வையால் மூடி வைக்கப்பட்டிருந்ததைப் பார்த்து அவர்களின் முகத்தை மட்டும் திறந்து இருகண்களுக்கு மத்தியின் நெற்றியில் குனிந்து முத்தமிட்டார்கள்“ என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அஹ்மத், புகாரி, நஸயீ, முஸ்லிம் மற்றும் இப்னுமாஜா)

ஹஜ், உம்ராவுக்காக இஹ்ராம் அணிந்திருக்கும் நிலையில் மரணித்தவரின் முகத்தையும் தலையையும் மூடக் கூடாது.

நபி(ஸல்) அவர்களுடன் ஹஜ்ஜு க்குச் சென்ற ஒருவர் அர.ஃபா மைதானத்தில் வாகனத்திலிருந்த நிலையில் விழுந்து கழுத்து முறிந்து மரணமடைந்தார்.

ம்அவரைத் தண்ணீர், இலந்தை இலை ஆகியவற்றால் குளிப்பாட்டுங்கள். அவர் உடுத்தியிருக்கும் இரண்டு துணியால் க.ஃபனிடுங்கள். வாசனைப் பொருட்களைப் பயன்படுத்தாதீர்கள். அவரின் தலையையும் முகத்தையும் மூடாதீர்கள். ஏனெனில் அவர் தல்பியா‘ கூறியவராக மறுமையில் எழுப்பப் படுவார்‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

இறந்த ஒரு மனிதருக்காக எத்தனை நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும் என்பதை அடுத்து காண்போம்.

உம்மு அதிய்யா(ரலி)யின் மகன் இறந்த மூன்றாவது நாள் அவர் மஞ்சள் நிற வாசனைத் தைலத்தை தம் மீது பூசிக்கொண்டார். கணவனைத் தவிர, மற்றவர் களுக்கு மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிப்பதை விட்டும் நாங்கள் தடுக்கப்பட்டிருந்தோம்" என்றும் அவர் கூறினார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

கணவனைத் தவிர வேறு எவருக்காகவும் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிக்கக் கூடாது என நபிமொழிகள் உள்ளன.

நபி(ஸல்) அவர்களின் மனைவி உம்மு ஹபீபா(ரலி) அவர்கள் தம் தந்தை அபூசுப்யான் மரணச் செய்தி கேட்ட மூன்றாவது நாள், நறுமணத்தை தம் கன்னங்களிலும், தோளிலும் தடவிக் கொண்டார். அல்லாஹ்வையும், மறுமை நாளையும் நம்பிக்கை வைத்துள்ள பெண்கள் தம் கணவரைத் தவிர வேறு எவருக்கும் மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிக்கக் கூடாது. கணவனுக்கு மட்டும் நான்கு மாதம் பத்து நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதை நான் கேட்டிருக்காவிட்டால் இந்த நறுமணம் எனக்குத் தேவையற்றதே' என்று கூறினார்கள்" அபூஸல்மாவின் மகன் ஜைனப்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்லிம்)

எனவே கணவன் இறந்துவிட்டால் மனைவி நான்கு மாதம் பத்து நாட்கள் துக்கம் அனுஷ்டிக்க வேண்டும். கணவனைத் தவிர மற்றவர்களுக்கு மூன்று நாட்களுக்கு மேல் துக்கம் அனுஷ்டிக்கக் கூடாது என்பதை இதன் மூலம் அறிந்து கொள்கிறோம்.

துக்கம் அனுஷ்டிப்பது என்றால் அழுது கொண்டே இருக்க வேண்டும். சோகத்தில் ஆழ்ந்து கிடக்க வேண்டும் என்பது பொருளல்ல. மாறாக அலங்காரங்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதேயாகும். உம்மு அதிய்யா(ரலி) தம் மகன் இறந்த மூன்றாவது நாள் நறுமணத்தைப் பூசிக்கொண்டதன் மூலமும், உம்மு ஹபீபா(ரலி) தம் தந்தை இறந்த மூன்றாவது நாள் நறுமணத்தைப் பூசிக்கொண்டதன் மூலமும் அதிகமான அலங்காரங்கள் இன்றி அம்மூன்று நாட்களையும் கழித்திருக்கிறார்கள் என்றே தெரிகிறது.

## மரணிக்கும் நல்லோர்களிடம் காணக்கூடிய அடையாளங்கள்

1, கண்மூடும் வேளையில் கலிமா

லாயிலாஹ இல்லல்லாஹ்ம் என்பதைத் தன் இறுதிப்பேச்சாக ஆக்கிக் கொள்பவர் சுவர்க்கத்தில் நுழைவார்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" (நூல்: ஹாகிம்)

2, கண்மூடும் வேளையில் நெற்றியில் வியர்வை,

புரைதா இப்னு ஹஸீப்(ரலி) அவர்கள் குராஸான் நாட்டில் இருக்கும்போது அவரின் சகோதரர்களில் ஒருவர், மரணப்படுக்கையில் இருப்பதைக் கேள்விப்பட்டு அவரைக் காணச் சென்றார். அப்போது மரணப்படுக்கையில் இருந்தவரின் நெற்றி வியர்த்திருந்தது. இதனைக் கண்ட புரைதா(ரலி), மகிழ்ச்சியால், அல்லாஹு அக்பர் (அல்லாஹ் மிகப் பெரியவன்) என்று கூறிவிட்டு, ஒரு நம்பிக்கையாளனின் மரண வேளையில் நெற்றி வியர்த்திருக்கு என்று நபி(ஸல்) அவர்கள் கூறியதைச் செவியேற்றுள்ளேன் என கூறினார். (நூல்கள்: அஹ்மத், நஸயி, திர்மிதி, ஹாகீம் இப்னு ஹிப்பான் மற்றும் இப்னுமாஜா)

3. ஜு ம்ஆ நாளின் இரவிலோ பகலிலோ கண் முடுவார்.

ம்ஜு ம்ஆ நாளின் பகலிலோ இரவிலோ ஒரு முஸ்லிம் மரணமடைந்தால் அவரை விட்டும் மண்ணறையின் வேதனையை அல்லாஹ் நீக்கி விடுகிறான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்". (நூல்: திர்மிதி, அஹ்மத்)

4. இறைனுக்காக, இஸ்லாத்திற்காகப் போர்க்களத்தில் உயிர்த் தியாகம் செய்வார்.

இறைவழியில் போரிட்டுக் கொல்லப்பட்டவர்களை மரித்தவர்கள் என்று எண்ணாதீர்கள். அவர்கள் தம் இரட்சகனிடத்தில் உயிருடன் இருக்கிறார்கள். அவனால் அவர்கள் உணவளிக்கப்படுகிறார்கள்.

தன் அருட் கொடையிலிருந்து அல்லாஹ் அவர்களுக்கு அளித்ததைக் கொண்டு அவர்கள் ஆனந்தத்துடன் இருக்கிறார்கள். மேலும் போரில் ஈடுபட்டிருந்த இறைநம்பிக்கையுள்ள தம் சகோதரர்களான அவர்கள் மரணத்தின் மூலம் தம்முடன் சேராமல் இவ்வுலகில் உயிருடன் இருப்போரைப் பற்றி அவர்களுக்கு எவ்விதப் பயமும் இல்லை அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள் என்று கூறி மகிழ்வடைகிறார்கள்.

அல்லாஹ்விடமிருந்து தாங்கள் பெற்ற நற்பேறுகள் பற்றியும் மேன்மையைப் பற்றியும் நிச்சயமாக அல்லாஹ் இறைநம்பிகையாளனுக்குரிய நற்கூலியை சிறிதளவு கூட வீணாக்குவதில்லை என்பதைப் பற்றியும் மகிழ்வடைந்தோராய் இருக்கின்றார்கள். (அல்குர்ஆன் 3:169-171)

5. போரில் எதிரிகளால் கொல்லப்படாமல் காயமுற்று நோயினால் மரணமடைவர். உங்களில் உயிர்த்தியாகிகளாக யாரைக் கருதுகிறீர்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களிடம் கேட்டபோது, போர்க்களத்தில் இறைவழியில் போரிட்டு இறப்பவரே உயிர்த்தியாகி' என அவர்கள் பதிலளித்தனர். அவ்வாறாயின் என் சமுதாயத்தில் உயிர்த்தியாகிகள் மிகக் குறைவாகவே இருப்பர்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறிவிட்டு போர்க்களத்தில் எதிரிகளால் கொல்லப்பட்டவரும் உயிர்த்தியாகியே! போர்க்களத்தில் நோயுற்றிருப்பவரும் உயிர்த்தியாகியே! பிளேக் நோயால் இறப்பவரும் உயிர்த்தியாகியே! நீரில் மூழ்கி இறப்பவரும் உயிர்த்தியாகியே! காலரா வயிற்றோட்ட நோயினால் இறப்பவரும் உயிர்த்தியாகியே!' என்றும் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்." (நூல்: முஸ்லிம், அஹ்மத்)

மற்றோர் அறிவிப்பில்,

1, போரில் காயம்பட்டு இறப்பவர்

2. வயிற்றோட்ட நோயினால் இறப்பவர்

3. நீரில் மூழ்கி இறப்பவர்

4. வீடு இடிந்து இறப்பவர்

5. எதிரிகளால் கொல்லப்பட்டவர் ஆகிய ஐந்து வகை நபர்கள் உயிர்த்தியாகிகள் ஆவர்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்". (நூல்: புகாரி, முஸ்லிம்)

6. பிரசவ வேதனையால் மரணிக்கும் பெண் உயிர்த் தியாகி ஆவாள்' என்று நபி(ஸல்) கூறினார்கள் (நூல்: அஹ்மத், திர்மிதி)

7. தன் பொருளைப் பாதுகாப்பதற்காகத் திருடனுடன் போரிட்டு மரணிப்பவனும், தன் மானம் காக்கப் போரிட்டு மரணிப்பவனும் உயிர்த்தியாகிகள் ஆவர். இஸ்லாமியப் பிரச்சாரப் பணிக்காகக் கொல்லப்படுபவரும் உயிர்த் தியாகியே! தன் உயிரைப் பாதுகாக்கப் போரிட்டு இறப்பவரும் உயிர்த்தியாகியே' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்கள்: நஸயீ, அபூதாவூத், திர்மிதி மற்றும் அஹ்மத்)

8. நற்செயல்களில் ஈடுபட்டிருக்கும்போது மரணமடைபவரும் உயிர்த்தியாகியே.

ஒரு கொடுங்கோல மன்னனிடம் நல்லதை ஏவித் தீயதைத் தடுத்த காரணத்தால் கொல்லப்படுபவர் உயிர்த்தியாகியாவார்.“ என்று நபி(ஸல்) கூறினார்கள். (நூல்: ஹாகிம்)

இவ்வாறு உயிர்த்தியாகிகள் பல வகைப்படுவர். ஆனால் இவர்கள் உலகில் வாழும் காலத்தில், தாம் உயிர்த்தியாகம் செய்து மரணிக்க வேண்டும் என்ற கருத்தில் திளைத்திருந்து அதற்கு முன்பு இவ்வாறு தீயில் கருகியோ, நீரில் மூழ்கியோ, காயம் பட்டோ, பிரசவ வலியினாலோ இறந்திருந்தாலே அவர் தியாகியாவார்.

தொழுகை நோன்பு போன்ற எந்த இஸ்லாமியக் கடமையையும் செய்யாமல் வெறும் பெயரளவில் முஸ்லிமாக வாழ்ந்து வீடு இடிந்து இறந்து விட்டால், நீரில் மூழ்கி இறந்து விட்டால் அவரைத் தியாகி என்று கூறிட இயலாது.

## விருந்து

மய்யித் வீட்டில் இறந்தவருக்குச் செய்ய வேண்டிய கடமைகள் பல இருக்க் ஒரு புறம் பெரும் அண்டாக்களில் சோறு சமைக்கப்படும் அநியாயத்தைக் காணலாம். மய்யித் அங்கே கிடக்க அதனருகிலேயே விருந்து பரிமாறப்படும் நிகழ்ச்சியையும் சில ஊர்களில் காணலாம். இது முற்றிலும் தவிர்க்கப்பட வேண்டிய மனிதாபிமானமற்ற ஒன்றாகும். இதைப் பற்றிக் கேட்டால் வெளியூரிலிருந்து வந்துள்ள உறவினர்களுக்கு உணவு கொடுக்கத்தானே வேண்டும் எனச் சொல்கிறார்கள். இது தவறானதாகும். வெளியூர்களிலிருந்து வந்தவர்கள் அங்குள்ள நிலையை அனுசரித்து மய்யித் வீட்டினரின் துக்கத்தில் பங்குகொள்ள வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் சொல்ல வேண்டும். பிற இடங்களிலோ, உணவகங்களிலோ சாப்பிட்டுக்கொள்ள வேண்டும். இது ஒன்றும் உயிர் போனதைவிட பெரிய காரியமல்ல.

மேலும் இறந்தவரின் குடும்பத்துக்கு நெருங்கிய உறவினர்களோ, அண்டை வீட்டுக்காரர்களோ உணவு சமைத்து இறந்தவரின் குடும்பத்தினருக்குக் கொடுக்க வேண்டும். அவர்களுக்கு ஆறுதல் கூறி உண்ணச் செய்யவேண்டும். இதுதான் சிறந்த முறையும் நபி வழியும் ஆகும்.

ஜாஅஃபர்(ரலி) அவர்கள் முத்தா“ போரில் கொல்லப்பட்ட செய்தியை தெரிவித்து ஜாஅஃபரின் வீட்டினருக்கு வேறு கவலை தரும் செய்தி வந்துவிட்டதால் அவரின் குடும்பத்தாருக்காக உணவு சமைத்துக்கொடுங்கள்‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என அப்துல்லாஹ் இப்னு ஜாஅஃபர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அபூதாவூத், அஹ்மத், திர்மிதி, இப்னுமாஜா, தாரமி, தப்ரானி மற்றும் ஷாஃபிஈ)

மய்யித்தை அடக்கிய பிறகு மய்யித்து வீட்டில் கூடுவதையும், அங்கு விருந்து சமைப்பதையும், ஒப்பாரி வைப்பதையும் குற்றமென நாங்கள் கருதுவோம்“ என்று ஜரீர் இப்னு அப்தில்லாஹ் அல் பஜலி(ரலி) கூறுகிறார். (நூல்கள்: அஹ்மத், இப்னுமாஜா)

எனவே மய்யித் வீட்டில் விருந்து வைபவம் போல் உணவு சமைத்து உண்பது அநாகரீகமானதும், மனிதாபிமானமற்றதும், நபிவழிக்கு முரணானதுமாகும்.

## குளிப்பாட்டுதல்

மய்யித்தை எப்படி எத்தனை முறை குளிப்பாட்ட வேண்டுமென்பதை இனி ஆராய்வோம்.

ஒருவர் இறக்கும்போது உயிர்போகும் வேதனையால் மலஜலம் கழித்துவிடுவதுண்டு. அவற்றைக் தண்ணீரால் கழுவிச் சுத்தம் செய்ய வேண்டும். இறந்த பின்பு ஏற்கனவே அவரின் உடலில்

அசுத்தங்களை நீக்கிக் குளிப்பாட்டுவார்கள். இதற்கு முஸ்லிம்களின் சொல்வழக்கில் கசப்பு' மாற்றுவது என்பர். அப்படி கசப்பு மாற்றும்போது ஒருவர் தன் கையில் துண்டுத் துணியைச் சுற்றிக்கொண்டு வயிற்றை லேசாக அமுக்கி மறைவிடங்களிலிருந்து வெளியாகும் மலஜலத்தை துண்டுத் துணிகள் சுற்றப்பட்ட கைகளால் கழுவ வேண்டும். மறைவிடங்களைக் கழுவும்போது மய்யித்தின் மேலே துணி போர்த்தப்பட்டிருக்க அந்தத் துணிக்கும் கீழ் கைவிட்டுக் கழுவ வேண்டும்.

அலி(ரலி) அவர்கள் நபி(ஸல்) அவர்களைக் குளிப்பாட்டினார்கள். அப்போது அவர்கள் கையில் ஒரு துண்டுத் துணி இருந்தது. நபி(ஸல்) அவர்களின் மேலாடைக்குள் கையை விட்டு கழுவிக் குளிப்பாட்டினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஹர்ஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: ஹாகிம்)

மேலும் குளிப்பாட்டும்போதும், கபனிடும்போதும், மய்யித்துதானே எனக் கருதி, அவரின் உடலுறுப்புக்களை முறையில்லாது இழுக்கவோ, வளைக்கவோ, கை, கால்களை உடைக்கவோ கூடாது மிருதுவாகக் கையாள வேண்டும்.

நிச்சயமாக மய்யித்தின் எலும்புகளை முறிப்பது உயிருடன் இருக்கும்போது அதன் எலும்புகளை முறிப்பது போன்றதுதான்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என ஆயிஷா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அஹ்மத், அபூதாவூத் மற்றும் இப்னுமாஜா)

நபி(ஸல்) அவர்களின் மகளார் ஜைனப்(ரலி) அவர்கள் மரணித்தபோது, இலந்தை இலை போடப்பட்ட தண்ணீரால் மூன்று முறையோ அல்லது ஐந்து முறையோ தேவைப்பட்டால் அதற்கும் அதிகமாகவோ நீங்கள் கழுவுங்கள், கடைசியாக கழுவும்போது கற்பூரத்தைச் சேர்த்துக்கொள்ளுங்கள். குளிப்பாட்டி முடிந்தவுடன் எனக்குத் தெரிவியுங்கள்!" என்று நபி(ஸல்) அவர்கள் பெண்களிடம் கூறினார்கள். நாங்கள் குளிப்பாட்டி முடிந்தவுடன் அவர்களிடம் தெரிவித்தோம். அப்போது எங்களிடம் அவர்களின் கீழாடை(வேஷ்டி)யைத் தந்து அதனால் மூடிக் கபனிடச் சொன்னார்கள் என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா மற்றும் நஸயீ)

மற்றோர் அறிவிப்பில் பெண்களைப் பார்த்து ஒற்றைப் படையாகக் கழுவுங்கள். மூன்று அல்லது ஐந்து அல்லது ஏழு தேவைப்பட்டால் அதற்கும் அதிகமாகக் கழுவுங்கள்" என்று நபி(ஸல்) கூறினார்கள் என உள்ளது. எனவே மய்யித்தின் உடல் தூய்மையாகும் அளவுக்கு 3,5,7 என்று ஒற்றைப் படையாகக் கழுவிக் குளிப்பாட்ட வேண்டும் அப்படிக் குளிப்பாட்டும்போது மணப்பொருட்களான இலந்தை இலை, கற்பூரம் போன்றவற்றைச் சேர்த்துக்கொள்ளலாம். ஜைனப்(ரலி) அவர்களைப் பெண்கள் கூட்டமே குளிப்பாட்டியது. எனவே பெண் மய்யித்தைப் பெண்களும், ஆண் மய்யித்தை ஆண்களும் குளிப்பாட்ட வேண்டும். (கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் குளிப்பாட்டலாம் என்பது பற்றிப் பின்னர் விளக்குவோம்) மேலும் நபி(ஸல்) தங்களின் கீழாடையை கபனாகப் பயன்படுத்தக் கொடுத்ததன் மூலம் கபனுக்குப் பழைய ஆடைகளைப் பயன்படுத்தலாம் என்பன போன்ற விஷயங்கள் தெரியவருகின்றன.

மற்றோர் அறிவிப்பில், குளிப்பாட்டும்போது,

வலப்புறத்திலிருந்தும், அதில் ஒளுச் செய்யும் இடங்களைக் கொண்டும் குளிப்பாட்டுதலை ஆரம்பம் செய்யுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

ஜைனப்(ரலி) அவர்களின் முடியை அவிழ்த்துக் கழுவிக் குளிப்பாட்டி மூன்று சடையாகப் பின்னி அவர்களுக்குப் பின்னால் (முதுகுப் புறத்தில்) அந்தச் சடைகளைப் போட்டோம் என உம்மு அதிய்யா(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், அஹ்மத்)

எனவே, குளிப்பாட்டும்போது வலப்புறம், ஒளுச் செய்யும் இடங்களிலிருந்து ஆரம்பிக்க வேண்டும். பெண்களின் தலைமுடியை அவிழ்த்துக் கழுவிக் குளிப்பாட்டி மூன்று பங்காக ஆக்கிப் பின்புறம் போட வேண்டுமெனத் தெரிகிறது.

### குளிப்பாட்டக் கூடாதவர்கள்

இஸ்லாமியப் போரில் கலந்துகொண்டு உயிர்த்தியாகம் செய்தவர்களின் உடல் மட்டும் குளிப்பாட்டப் படக்கூடாது. அவர் குளிப்பு கடமையானவராக இருக்கிறார் என அறியப் பட்டாலும் சரியே. மற்ற எந்த முஸ்லிமின் உடலையும் குளிப்பாட்டியே ஆக வேண்டும்.

'உஹத்' போரில் கொல்லப்பட்டவர்களைக் குளிப்பாட்டாமல் நபி(ஸல்) அவர்கள் நல்லடக்கம் செய்தார்கள்" என்ற செய்தி புகாரி, நஸயீ, இப்னுமாஜா ஆகிய நூல்களில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ம்உங்கள் தோழர் ஹன்லலாவை வானவர்கள் குளிப்பாட்டுகிறார்கள். அவர் மனைவியிடம் என்ன நடந்தது என்று விசாரியுங்கள்ம் என நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அவர்கள் சென்று கேட்ட போது, அவர் குளிப்புக் கடமையானவராக இருந்தார். போருக்கான அறிவிப்பைக் கேட்டவுடன் பாய்ந்து சென்றார் எனக் கூறியதாக நபி(ஸல்) அவர்களிடம் கூறினார். அதனால் தான் அவரை வானவர்கள் குளிப்பாட்டுகிறார்கள்ம் என்று நபி(ஸல்) கூறினார்கள் என அப்துல்லாஹ் இப்னு ஸு பைர்(ரலி) அறிவிக்கிறார்.

### தம்பதிகள் ஒருவரை ஒருவர் குளிப்பாட்டலாம்

இறந்துபோனவரைக் குளிப்பாட்டுவதற்கென்று ஒரு சாராரை நியமனம் செய்துகொண்டு, மற்றவர்கள் செய்யலாகாது என்று நம்மவர்கள் நம்பியுள்ளனர். இந்த நம்பிக்கை தவறாகும். ஆண் பிரேதத்தை எந்த ஆண் வேண்டுமானாலும் குளிப்பாட்டலாம். பெண் பிரேதத்தை எந்தப் பெண் வேண்டுமானாலும் குளிப்பாட்டலாம். எனினும் நபித்தோழர்கள் காலத்தில் நெருங்கிய உறவினர்களே குளிப்பாட்டி வந்திருப்பதால் அதே முறையைக் கடைபிடிப்பது சிறப்பாகும்.

கணவனை மனைவியும், மனைவியைக் கணவனும் குளிப்பாட்ட எந்தத் தடையுமில்லை. இதைத் தவிர எந்தப் பெண்ணையும் எந்தச் சந்தர்ப்பத்திலும் ஆண்கள் குளிப்பாட்டலாகாது, அதுபோலவே எந்த ஆணையும், அவனுடைய மனைவியைத் தவிர வேறு பெண்கள் குளிப்பாட்டலாகாது.

நீ எனக்கு முன்னர் இறந்துவிட்டால் நானே உன்னைக் குளிப்பாட்டி நானே உனக்கு கஃபன் (பிரேத ஆடை) அணிவித்து ஜனாஸா தொழுகை நடத்தி நல்லடக்கமும் செய்வேன்' என்று தம் மனைவி ஆயிஷா(ரலி) அவர்களிடம் நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" இதை ஆயிஷா(ரலி) அவர்களே அறிவிக்கிறார்கள். (நூல்கள்: இப்னுமாஜா, அஹ்மத் மற்றும் இப்னுஹிப்பான்)

அபூபக்ர்(ரலி) அவர்கள் மரணமானபோது அவர்களின் மனைவி அஸ்மா பின்த் உமைஸ்(ரலி) அவர்கள், தம் கணவரின் மரண சாசனப்படி, குளிப்பாட்டி னார்கள், அவர்கள் பலவீனமாக இருந்ததால் துணைக்கு அப்துர் ரஹ்மான் இப்னு அவ்பு அவர்களையும் சேர்த்துக்கொண்டார்கள்" என அப்துல்லாஹ் இப்னு அபூபக்ர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஅத்தா)

நபி(ஸல்) அவர்களின் மகளார் பாத்திமா(ரலி) அவர்களை அவர்களின் கணவர் அலீ(ரலி) அவர்கள்தான் குளிப்பாட்டியிருக்கிறார்கள். (நூல்கள்: தாரகுத்னீ, பைஹகீ மற்றும் ஷாஃபியீ)

கணவன், மனைவியையும், மனைவி கணவனையும் குளிப்பாட்டலாம் என்பதற்கு இவை தெளிவான சான்றுகளாகும். ஆண்கள் மட்டுமே உள்ள இடத்தில் ஒரு பெண் மரணித்துவிட்டாலோ அல்லது

பெண்கள் மட்டுமே உள்ள இடத்தில் ஓர் ஆண் இறந்துவிட்டாலோ என்ன செய்வது? நபி(ஸல்) அவர்கள் அதையும் தெளிவுபடுத்துகிறார்கள்.

பல ஆண்கள் இருக்கும் இடத்தில் ஒரு பெண் இறந்துவிட்டாலும், பல பெண்கள் இருக்கும் இடத்தில் ஓர் ஆண் இறந்துவிட்டாலும் (அவர்களைக் குளிப்பாட்டாமல்) அவர்களுக்கு தயம்மும் செய்விக்கப்பட வேண்டும். தண்ணீர் இல்லாதபோது உள்ள சட்டமே இவர்களுக்கும் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என மக்ஹூ ல்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அபூதாவூத், பைஹகீ)

தண்ணீர் இல்லாதபோதும், தண்ணீரைப் பயன்படுத்த முடியாதபடி உடல் சிதைக்கப்பட்டிருந்தாலும் இவ்வாறே தயம்மும் செய்விக்கப்பட வேண்டும் என்பதையும் மேற்கூறிய நபிமொழி தெளிவாக்குகின்றது.

இந்த நபிமொழி முர்ஸல்‘ எனும் வகையைச் சேர்ந்ததாக இருப்பதால் இதை மட்டும் வைத்து சட்டம் வகுக்க முடியாது. ஆனாலும்,கணவனைத் தவிர வேறு எந்த ஆணும் ஒரு பெண்ணின் மறைவான அங்கங்களைப் பார்க்கக் கூடாது என்பதையும், ஓர் ஆணின் எல்லா அங்கங்களையும், மனைவி தவிர வேறு எந்த பெண்ணும் பார்க்கலாகாது என்பதையும் ஏராளமான நபிமொழிகள் அறிவிக்கின்றன. அந்த அடிப்படையில் ஆண்கள், பெண்களையும், பெண்கள் ஆண்களையும் குளிப்பாட்டலாகாது என்பதை அறியலாம். குளிப்பாட்டும்போது, அனைத்து அங்கங்களையும், பார்க்கின்ற தொடுகின்ற நிலை ஏற்படவே செய்யும்.

இது போன்ற நிலை ஏற்படும்போதும், குளிப்பாட்ட இயலாதபோதும், தயம்மும் தவிர வேறு வழி இல்லை என்பதையும் மனதிற்கொள்ள வேண்டும்.

மய்யித்தைக் குளிப்பாட்டும்போது சில ஊர்களில் அஷ்ஹது அன்லாயிலாஹ இல்லல்லாஹ்‘ என்ற கலிமாவைச் சொல்லிக்கொண்டே குளிப்பாட்டுகின்றார்கள். ஆனால் இவற்றை ஓதும்படி எந்த நபிமொழியும் இல்லை. ஏதும் சொல்லாமலேயே ஜனாஸாவைக் குளிப்பாட்டியுள்ளனர்.

மய்யித்தைக் குளிப்பாட்டிய பின்பு அதற்கு நறுமணம் பூச வேண்டும். ஏனெனில், மணப்பொருட்களால் மய்யித்தை மூன்று முறை நறுமணம் பூசுங்கள்‘ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்“ என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: அஹ்மத், பைஹகீ)

மய்யித்தைக் குளிப்பாட்டிய பின் சில இடங்களில் அதற்கு ஒளுச் செய்து வைக்கிறார்கள். இது பற்றி எந்த நபிமொழியும் இல்லை. நபித்தோழர்களும் கூட அப்படிச் செய்யவில்லை.

ஸயீத் இப்னு ஜைதின் மகன் இறந்தபோது இப்னு உமர்(ரலி) அவர்கள் இலந்தை இலை கலந்த தண்ணீரால் அவரின் உடலைக் குளிப்பாட்டி நறுமணப் புகை போட்டு சுமந்து சென்று தொழவைத்து, அடக்கினார்கள். அவருக்கு ஒளுச் செய்து வைக்கவில்லை“ என்ற செய்தி புகாரியில் பதிவு செய்யப்பட்டுள்ளது. இமாம் மாலிக் அவர்களும் இதைத் தம் முஅத்தா‘ எனும் நூலில் கூறியுள்ளார்.

குளிப்பாட்டுபவர் மய்யித்தின் உடலில் காணும் குறை நிறைகளை வெளியில் வேறு யாரிடமும் கூறக் கூடாது.

ஒரு முஸ்லிமைக் குளிப்பாட்டி அவரிலுள்ள குறைபாடுகளை வெளியில் சொல்லாமல் மறைத்துக் கொண்டால் அல்லாஹ் அவரை நாற்பது முறை மன்னிக்கிறான். கப்ரு தோண்டியவருக்கு நல்ல இருப்பிடத்தை மறுமை வரை அளிக்கிறான். கஃபனிட்டவருக்கு அல்லாஹ் சுவர்க்கத்தில் மெல்லிய அழுத்தமான உடைகளை அணிவிக்கிறான்“ என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். (நூல்: பைஹகீ)

குளிப்பாட்டவோ கஃபனிடவோ, கப்ருதோண்டவோ எந்தக் கூலியும் பெறக் கூடாது. இறைவனுக்காகவே இவற்றைச் செய்ய வேண்டும்.

ஜனாஸாவைக் குளிப்பாட்டியவரும் குளித்துக்கொள்வதே நபிவழியாகும்.

மய்யித்தைக் குளிப்பாட்டியவர் தானும் குளித்துக் கொள்ள வேண்டும். மய்யித்தைச் சுமப்பவர் ஒளுச் செய்துகொள்ளட்டும்' என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: தாரகுத்னீ)

இதே நபிமொழி இப்னுமாஜா, அஹ்மத், திர்மிதி, அபூதாவூத் ஆகிய நபிவழித் தொகுப்புகளிலும் இடம் பெற்றுள்ளது என்றாலும் தாரகுத்னீயில் இடம் பெறும் அறிவிப்பாளர் தொடர் மட்டுமே சரியானதாகும்.

நீங்கள் மய்யித்தைக் குளிப்பாட்டினால் கைகளைக் கழுவிக் கொண்டால் போதுமானது" என்று நபி(ஸல்) கூறினார்கள். (நூல்: ஹாகிம், ஹைகீ)

நாங்கள் மய்யித்தைக் குளிப்பாட்டுவோம். பின்னர் எங்களில் சிலர் குளிப்பார்கள், சிலர் குளிக்கமாட்டார்கள் என இப்னு உமர்(ரலி) அறிவிக்கிறார். (தாரருத்னீ) எனவே குளிப்பது கட்டாயமல்ல. அல்லது மய்யித்தை அசுத்தங்கள் நீங்கக் குளிப்பாட்டி விட்டு தன்மீது அசுத்தம் இருப்பதாகக் கருதுபவர் குளித்துக் கொள்ளட்டும். சாதரணமாகக் குளிப்பாட்டியவர் குளிக்க வேண்டியதை கட்டாயக் கடமையெனக் கருதக்கூடாது.

### கபன்

அடக்கம் செய்வதற்காக முன்பு மய்யித்துக்குப் போர்த்தும் துணிக்கு கபன்' என்று கூறப்படும்.

உங்கள் சகோதரருக்கு அழகிய முறையில் கபனிடுங்கள்' என்று நபி(ஸல்) கூறினார்கள்" என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஸ்லிம்)

சுத்தமான தூய வெண்மையான உடலை முழுவதும் மறைக்கும்படியான துணிகளைக் கொண்டு கபனிடுவதே அழகிய முறை' என்பதன் கருத்தாகும்.

வெண்மையான ஆடைகளை அணிவியுங்கள், அதுவே நீங்கள் அணியும் ஆடைகளிலேயே சிறந்ததாகும். வெண்மையான ஆடைகளைக் கொண்டே உங்களில் இறந்தவர்களுக்கும் கபனிடுங்கள்" என இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: அபூதாவூத், இப்னுமாஜா, திர்மிதி, பைஹகீ, ஹாகிம் மற்றும் இப்னு ஹிப்பான்)

எனவே வெள்ளை ஆடைகளைக் கொண்டு கபனிடுதல் சிறந்ததாகும். கபனுக்கு நடுத்தரமான துணிமணிகளையே பயன்படுத்த வேண்டும். வீண் விரயம் செய்வதைப் பொதுவாகவே எல்லாக் காரியங்களிலும் மார்க்கம் தடுத்துள்ளது.

### போரில் ஷஹீதானவர்களுக்குத் தொழ வைக்க வேண்டுமா?

நபி(ஸல்) அவர்கள் காலத்தில் பல அறப்போர்கள் நடந்துள்ளன. அந்தப் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு நபி(ஸல்) தொழவைத்தார்கள் என்றோ, தொழவைக்க அனுமதித்ததாகவோ நபிமொழிகள் எதுவும் இல்லை. எனினும் உஹுத் போர்க்களத்தில் கொல்லப்பட்ட ஹம்ஸா(ரலி) உட்பட பல நபித்தோழர்களுக்குத் தொழவைக்கவில்லை என்றும், தொழவைத்தார்கள் என்றும் முரண்பட்ட பல அறிவிப்புகள் உள்ளன. அவற்றில் பெரும்பாலானவை ஆதாரமானதாக இல்லை. ஓரிரு நபிமொழிகள் மட்டுமே பலமாக உள்ளன. அவற்றைப் பார்ப்போம்.

உஹுத் போரில் கொல்லப்பட்டவர்களுக்குக் குளிப்பாட்டவும் இல்லை, தொழவைக்கவும் இல்லை" என ஜாபிர்(ரலி) அறிவிக்கிறார்கள். (இது திர்மிதியிலுள்ள ஹதீஸின் சுருக்கமாகும்) (நூல்: புகாரி, நஸயீ, மற்றும் இப்னுமாஜா)

மேற்கண்ட நபிமொழி மட்டுமே இருந்து, இதற்கு முரணான வேறு நபிமொழிகள் இல்லை என்றால் ஷஹீதுகளுக்குத் தொழவைக்க வேண்டியதில்லை என்ற முடிவிற்கு நாம் வரலாம். ஆனால் இதற்கு மாற்றமாக ஆதாரப்பூர்வமான இன்னொரு நபிமொழி இருப்பதால் இவ்விரண்டையும் வைத்தே நாம் ஒரு முடிவுக்கு வரவேண்டும். அதுவே சரியான முடிவாகும். இதோ அந்த நபிமொழி...

உஹத்' போர் நடந்து முடிந்த எட்டு வருடங்களுக்குப் பின்னர் உஹத் போரில் கொல்லப்பட்டவர்களுக்கு நபி(ஸல்) அவர்கள் மய்யித்துக்கு தொழவைக்கும் அதே தொழுகையை தொழவைத்தார்கள்" என்று உக்பதுப்னு ஆமிர்(ரலி) அறிவிக்கிறார்கள். நான் நபி(ஸல்) அவர்களை அப்போதுதான் கடைசியாகப் பார்த்தேன். அதற்குப் பின்பு அவர்களைப் பார்க்கவில்லை (மரணித்துவிட்டார்கள்) என்றும் இதை அறிவிக்கும் உக்பதுப்னு ஆமிர்(ரலி) குறிப்பிடுகிறார்கள். (புகாரி, அஹ்மத், நஸயீ, தாரகுத்னீ, பைஹகீ)

உஹதுப்போரில் கொல்லப்பட்டவர்களுக்குப் போர்க் களத்திலேயே நபி(ஸல்) அவர்கள் தொழவைக்காமல் இருந்தாலும், எட்டு ஆண்டுகள் கழித்து அவர்களுக்காகத் தொழவைத்திருப்பது அவர்களுக்கும், ஜனாஸா தொழுகை அவசியம் என்பதை உணர்த்தும் விதமாக அமைந்துள்ளது. மேலும் நபி(ஸல்) அவர்கள் பொதுவாகவே ஜனாஸா தொழுகையின் அவசியத்தை வலியுறுத்தியிருக் கிறார்கள். இவற்றில் யாருக்காவது விதிவிலக்கு இருக்கும் என்றால் தற்கொலை செய்தவருக்குத் தொழவைக்க மாட்டேன்" என்று விலக்களித்தது போல் தெளிவாகச் சொல்லி இருப்பார்கள். ஷஹீதுகளுக்கு ஜனாஸா தொழவைக்கக் கூடாது என்று ஆதாரப்பூர்வமான ஹதீஸ் எதுவும் இல்லை.

### கடன்காரருக்குத் தொழவைக்கலாமா?

கடன்காரராக இருந்த ஒருவரின் ஜனாஸா கொண்டுவரப்பட்டால் அவரின் கடனை அடைக்க ஏதாவது மேல் மிச்சமாக (பணம் அல்லது பொருள்) விட்டுச் சென்றிருக்கிறாரா என்று நபி(ஸல்) அவர்கள் கேட்பார்கள். கடனை அடைக்க ஏதாவது விட்டுச் சென்றிருக்கிறார்" என்று கூறப்பட்டால் அவருக்கு ஜனாஸா தொழவைப்பார்கள். இல்லாவிட்டால் முஸ்லிம்களைப் பார்த்து, உங்களின் தோழருக்கு தொழுகை நடத்துங்கள்" என்று நபி(ஸல்) அவர்கள் கூறுவார்கள். (இது ஆரம்ப நிலை) பின்னர் பல நாடுகள் வெற்றி கொள்ளப்பட்டு (செல்வம் அரசாங்கத்தில் சேர்ந்த பின்பு) இறைநம்பிக்கையாளர்களுக்கு அவர்களை விட நானே அதிகப் பொறுப்பாளன். எனவே இறைநம்பிக்கையாளர்களிலிருந்து கடனாளியாக யாரும் இறந்துவிட்டால் அதை நிறைவேற்றுவது என் கடமை, ஆனால் யார் செல்வத்தை விட்டு விட்டு இறந்துவிட்டார்களோ, அது அவரின் வாரிசுக்காரர்களுக்கு உரியது' என்று நபி(ஸல்) அவர்கள் கூறி தொழவைப்பார் கள்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், திர்மிதி மற்றும் நஸயி)

எனவே ஒருவர் கடனாளியாக இருக்கும் நிலையில் எதையும் விட்டுச் செல்லாமல் இறந்துவிட்டால் அவரின் கடனை அடைப்பதற்கான பொறுப்பை இஸ்லாமிய அரசு ஏற்றுக் கொள்ளவேண்டும் என்பதை மேற்கண்ட நபிமொழி தெளிவுபடுத்துகிறது. ஆனால் தற்காலத்தில் இஸ்லாமிய அரசோ - பைத்துல்மால் என்ற பொதுநிதியோ இல்லாத காரணத்தால் கடனாளியாக ஒருவர் இறந்துவிட்டால் அவரின் கடனை முஸ்லிம்களில் பெரும் பணக்காரர்கள் ஏற்றுக்கொண்டு உதவுவதே சிறப்பாகும். என்பதையும், அவர் கடனை அடைப்பதற்காகப் பொருட்களை விட்டுச் சென்றால் அதிலிருந்து கடனை அடைத்துவிட்டு மீதத்தை வாரிசுக்காரர்கள் பங்கிட்டுக்கொள்ள வேண்டும் என்பதையும் பின்வரும் நபிமொழியின் மூலம் அறியலாம்.

நாங்கள் நபி(ஸல்) அவர்களுடன் அமர்ந்திருக்கும்போது ஒரு ஜனாஸா கொண்டுவரப்பட்டது. தொழவையுங்கள்' என்றும் கூறப்பட்டது. அதற்கு நபி(ஸல்) அவர்கள், அவருக்குக் கடன் உள்ளதா

எனக் கேட்டார்கள். இல்லை என்று பதில் சொன்னார்கள். ஏதாவது விட்டுச் சென்றிருக்கிறாரா என்றும் கேட்டார்கள். இல்லை‘ என்று அவர்கள் சொன்னார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாவுக்குத் தொழுகை நடத்தினார்கள். பின்பு வேறொரு ஜனாஸா கொண்டுவரப்பட்டு தொழவைக்கச் சொல்லப்பட்டது. அப்போதும் நபி(ஸல்) அவர்கள் அவருக்குக் கடன் இருக்கிறதா? என்று கேட்க ஆம்‘ என்று கூறப்பட்டது. ஏதாவது விட்டுச் சென்றிருக்கிறாரா? என்று நபி(ஸல்) அவர்கள் கேட்க, மூன்று தீனார்கள்‘ என்று சொல்லப்பட்டது. அவருக்கு நபி(ஸல்) அவர்கள் தொழவைத்தார்கள். மூன்றாவதாக ஒரு மய்யித் கொண்டுவரப்பட்டபோது இவர் ஏதும் விட்டுச் சென்றிருக்கிறாரா என்று கேட்க அவர்கள் இல்லை என்றனர். இவருக்குக் கடன் இருக்கிறதா என்று கேட்க, மூன்று தீனார் கடன் உள்ளது என்று அங்கிருந்தோர் சொன்னார்கள். அப்போது நபி(ஸல்) அவர்கள் உங்களின் தோழருக்குத் தொழுகை நடத்துங்கள் என்று தோழர்களிடம் கூறினார்கள். அதைக்கேட்ட அபூகதாதா என்ற அன்ஸாரித் தோழர் கடனை, நான் ஏற்றுக்கொள்கிறேன், இறைத்தூதர் அவர்களே! தொழவையுங்கள்“ என்று கூறினார் என ஸலமதுப்னுல் அக்வஃ(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, அஹ்மத் மற்றும் நஸயீ)

ஆரம்ப காலத்தில் நபி(ஸல்) அவர்கள் கடன்காரருக்குத் தொழ வைக்கவில்லை. தம் தோழர்களைப் பார்த்து அவருக்குத் தொழவைக்கும்படி கூறியிருக்கிறார்கள். பிற்காலத்தில் நபி(ஸல்) அவர்கள் கடன்காரர்களுக்கும், தொழ வைத்துள்ளார்கள் என்பதை முன்பு சென்றுள்ள நபிமொழி அறிவிக்கிறது. எனவே கடன்காரருக்கும் தொழவைக்க வேண்டும் என்பதே சரியான முடிவாகும்.

### கனீமத் பொருளை மோசடி செய்தவருக்குத் தொழ வைக்கலாமா?

எதிரிகளோடு அறப்போரில் ஈடுபடும்போது அவர்கள் கொல்லப்பட்டோ, புறமுதுகாட்டி ஓடும்போதோ விட்டுச் செல்லும் பொருள்களுக்கு கனீமத்‘ என்று சொல்லப்படும். அவற்றை கைப்பற்றும் முஸ்லிம்கள் ஐந்தில் ஒரு பகுதியை அரசிடம் ஒப்படைக்க வேண்டும். அதில் மீதமுள்ளதைத் தங்களுக்குள் பங்கிட்டுக் கொடுக்கவேண்டும்.

கைபர் போரின்போது ஒரு நபித்தோழர் இறந்துவிட்டதாக நபி(ஸல்) அவர்களிடம் கூறப்பட்டது. அப்போது நபி(ஸல்) அவர்கள் உங்களின் தோழருக்காகத் தொழுங்கள்‘, என்று மற்ற நபித்தோழர்களைப் பார்த்துக் கூறினார்கள். இதனால் அங்கிருந்த தோழர்களின் முகங்களில் மாறுதல் காணப்பட்டன. அப்போது நபி(ஸல்) அவர்கள், உங்களின் இத்தோழர் இறைவழியில் உள்ளதில் மோசடி செய்துவிட்டார்‘ என்று கூறினார்கள். உடனே நாங்கள் அவர் வைத்திருந்த பொருட்களை துருவி ஆராய்ந்து தேடும்போது இரண்டு திர்ஹங்களுக்கும் குறைந்த மதிப்புடைய யூதர்கள் கழுத்தில் அணியும் (நூலில் கோர்க்கப்படும் மணிமாலை போன்ற) மாலை ஒன்றை கண்டோம் என ஸைத் இப்னு காலிதில் ஜு ஹ்னீ(ரலி) அறிவிக்கிறார். (நூல்: முஅத்தா, அபூதாவூத், நஸயீ, இப்னுமாஜா, ஹாகிம் மற்றும் அஹ்மத்)

கனீமத் (போரில் கிடைத்த) பொருளில் மோசடி செய்தவர்களுக்கும், கடனாளிக்கும் நபி(ஸல்) அவர்கள் தொழவைக்கவில்லை என்றாலும் தோழர்களைப் பார்த்து நீங்கள் தொழுகை நடத்துங்கள் என்று சொன்னதன் மூலம் இவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்தலாம் என்பதைப் புரிந்து கொள்ளமுடிகிறது. இது போன்ற தவறுகளை விட்டும் மக்கள் ஒதுங்கி இருக்கவேண்டும் என்பதை எச்சரிக்கும் முகமாகவே நபி(ஸல்) அவர்கள் இவ்வாறு செய்திருக்கிறார்கள் என்று விளங்கிக் கொள்வதே சரியானதாகும்.

### காபிர்களுக்குத் தொழுகை நடத்தலாமா?

ஜனாஸா தொழுகை என்பது அந்த ஜனாஸாவிற்காகப் பாவமன்னிப்புத் தேடுவதுடன் மறுமை நலனுக்காக பிரார்த்திப்பதும் ஆகும். அந்த அடிப்படையில் அல்லாஹ் பின்வருமாறு குர்ஆனில் கூறியுள்ளான்.

இணைவைப்பவர்கள் தம் நெருங்கிய உறவினர்களாக இருப்பினும், நிச்சயமாக அவர்கள் நரகவாசிகள் என்பது தெளிவான பின்னரும் அவர்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்பது நபிக்கும், இறைநம்பிக்கையாளர்களுக்கும் கூடாத ஒன்றாகும்“

எனவே இறைமறுப்பாளர்களுக்காகப் பாவமன்னிப்புக் கேட்பது கூடாது. அப்துல்லாஹ் இப்னு உபை என்னும் நயவஞ்சகன் மரணித்தபோது நபி(ஸல்) அவர்கள் அவருக்காக தொழுகை நடத்த முற்பட்டபோது,

அவர்களில் யாராவது ஒருவர் இறந்துவிட்டால் அவருக்காக நீர் ஒருக்காலும் (ஜனாஸாத்) தொழுகை தொழ வேண்டாம். இன்னும் அவரின் கப்ரில் (பிரார்த்தனைக்காக) நிற்க வேண்டாம். ஏனென்றால் நிச்சயமாக அவர்கள் அல்லாஹ்வையும், அவன் தூதரையும் மறுக்கும் பாவிகளாகவே இறந்தார்கள்.“ (அல்குர்ஆன்: 9:84) என்ற திருக்குர்ஆன் வசனம் இறக்கி அருளப்பட்டது.

எனவே மேற்கண்ட திருவசனங்களின் மூலம் இறைமறுப்பாளர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்தக் கூடாது. அவர்களின் மறுமை நலன் வேண்டி பாவமன்னிப்பு போன்ற பிரார்த்தனைகள் புரியக்கூடாது என்பதை அறியவேண்டும்.

### ஜனாஸா தொழுகை விளக்கம்

இறந்தவருக்காகச் செய்யப்படும் ஒரு பிரார்த்தனை முறை ஜனாஸா தொழுகை எனப்படும். இதை நான் முன்னரும் குறிப்பிட்டுள்ளேன். அதில் எத்தனை முறை தக்பீர் சொல்ல வேண்டுமென்பது பற்றி நபிமொழிகளில் பலவாறு காணப்படுகின்றன. எனவே அவற்றைத் தெளிவாக அறிவது அவசியம்.

### தக்பீர்கள்

நஜாஷி மன்னருக்காக (காயிப் ஜனாஸா) தொழவைத்தபோது நபி(ஸல்) அவர்கள் நான்கு தக்பீர்கள் கூறி தொழவைத்தார்கள்“ என ஜாபிர்(ரலி) மற்றும் அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம் மற்றும் அஹ்மத்)

நபி(ஸல்) அவர்கள், ஒரு மனிதர் நோய்வாய்ப்பட்டபோது, நோய் விசாரிக்கச் செல்பவர்களாக இருந்தனர். அவர் இறந்தபோது, அவரை இரவோடு இரவாகவே அடக்கம் செய்துவிட்டு மறுநாள் காலையில் நபி(ஸல்) அவர்களுக்கு நபித்தோழர்கள் தெரிவித்தனர். (இரவு நேரத்திலேயே) எனக்கு ஏன் தெரியப்படுத்தவில்லை என்று நபி(ஸல்) அவர்கள் கேட்க இருள் நிறைந்த இரவாக இருந்ததால் உங்களுக்குக் கஷ்டம் தருவதை நாங்கள் விரும்பவில்லை என்று கூறினார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள், அவரை அடக்கம் செய்திருந்த கப்ருக்கு வந்து அவருக்காகத் தொழவைத்தார்கள். அப்போது 4 தக்பீர்கள் சொன்னார்கள் என அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: புகாரி, இப்னுமாஜா, முஸ்லிம், நஸயீ, திர்மிதி, பைஹகீ மற்றும் அஹ்மத்)

### 6, 7 தக்பீர்கள்

நபி(ஸல்) அவர்கள் காலத்திலே (நபித்தோழர்கள் ஜனாஸா தொழுகையின் போது) நான்கு, ஐந்து, ஆறு, ஏழு என பலவாறு தக்பீர் சொல்லும் வழக்கத்தை மேற்கொண்டிருந்தார்கள். உமர்(ரலி) அவர்கள் நபித்தேழர்களை நான்கு தக்பீர்கள் சொல்லும்படி ஏவி, ஒருமித்தக் கருத்தை ஏற்படுத்தினார்கள். (நூல்: பைஹகீ)

நபி(ஸல்) அவர்கள் காலத்திலேயே 4 முதல் 7 தக்பீர்கள் வரை சொன்னதற்கு ஆதாரம் இருப்பதால் அதை நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். உமர்(ரலி) அவர்கள் நான்கு தக்பீர்கள் என வரையறுத்ததை நான் மறுக்கவோ, அதுமட்டுமே சரியென முழுமையாக ஆதரிக்கவோ தேவை இல்லை. ஏனெனில் அதுவும் நபிவழியில் ஒன்றாகும்.

அலீ(ரலி) அவர்கள் ஸஹ்ல் இப்னு ஹு னைஃப்(ரலி) அவர்களுக்கு ஜனாஸா தொழுகை நடத்தியபோது ஆறு தக்பீர்கள் சொன்னார்கள். இவர் பத்ருப் போரில் கலந்து கொண்டவர் என்பதைத் தெரிவித்தார்கள். அலீ(ரலி) அவர்கள் பத்ருப் போரில் கலந்துகொண்டவர்களுக்குத் தொழுகை நடத்தியபோது, ஆறு தக்பீர் சொல்வதையும், மற்ற நபித்தோழர்களுக்குத் தொழவைக்கும்போது ஐந்து தக்பீர் சொன்னதையும், மற்ற மக்களுக்குக்கு தொழவைக்கும்போது நான்கு தக்பீர் சொன்னதையும் வழமையாகக் கொண்டிருந்தார்கள். (நூல்கள்: தாரகுத்னீ, பைஹகீ)

பத்ருப்போரில் கலந்துகொண்டவர்களின் ஜனாஸாவுக்குத் தொழவைக்கும் போது 5, 6, 7 தக்பீர்கள் சொல்லும் வழமையை (நபித்தோழர்கள்) கடைபிடித்தார்கள் என்று ஹகம் இப்னு உதய்பா அவர்கள் அறிவிப்பதாக ஸயீத் இப்னு மன்ஸூ ர் தம் ஸு னன் நூலில் குறிப்பிடுகிறார்கள்.

## தக்பீர் கூறும்போது கைகளை உயர்த்த வேண்டுமா?

ஜனாஸாத் தொழுகையில் 4 முதல் 7 தக்பீர்கள் வரைக் கூறலாம் என்பதை மேற்கண்ட ஆதாரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி தக்பீர்கள் கூறும்போது ஒவ்வொரு தக்பீருக்கும் கைகளை உயர்த்த வேண்டுமா என்பதையும் காண வேண்டும். நபி(ஸல்) அவர்கள் ஒவ்வொரு தக்பீரிலும் கைகளை உயர்த்தினார்கள்“ என பைஹகீ, தப்ரானி, தாரகுத்னீ ஆகிய நூல்களில் சில நபிமொழிகள் இடம் பெற்றுள்ளன. நபி(ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையில் முதல் தக்பீரில் மட்டுமே கைகளை உயர்த்துவார்கள். மற்ற தக்பீர்களில் கரங்களை உயர்த்தமாட்டார்கள் என்ற கருத்திலும் தாரகுத்னீ, திர்மிதி ஆகிய நூல்களில் நபிமொழிகள் வந்துள்ளன. இவ்விரண்டு கருத்துகளுள்ள நபிமொழிகளும் ஆதாரமானவையாக அல்ல. இவையாவும் பலவீனமானவை என்று ஹதீஸ் கலைவல்லுனர்கள் குறிப்பிடுகிறார்கள். எனவே இந்த ஹதீஸ்களின் அடிப்படையில் கரங்களை உயர்த்த வேண்டும் என்றோ, உயர்த்தக்கூடாது என்றோ தீர்வு சொல்ல முடியாது.

ஜனாஸா அல்லாத மற்ற தொழுகைகளில் நபி(ஸல்) அவர்கள் தக்பீர் சொல்லும்போதெல்லாம் கையை உயர்த்தினார்கள் என்று ஹதீஸ்கள் வந்துள்ளதால் ஜனாஸா தொழுகையிலும் கைகளை உயர்த்த வேண்டும் என்று சிலர் கூறும் கூற்று ஏற்றுக்கொள்ள முடியாததாகிறது. காரணம் மற்ற தொழுகைகளில் தக்பீர் கூறும்போதெல்லாம் நபி(ஸல்) கைகளை உயர்த்தியதாக நபிமொழிகளில் காணப்படவில்லை. உதாரணமாக, சஜ்தாவிலிருந்து எழுந்து அமரும்போது, அதே போல முதல் ரக்அத் முடிந்த பின் சஜ்தாவிலிருந்து எழும்போது கைகளை உயர்த்தவில்லை, மாறாக, ருகூவிலிருந்து ஸமியல்லாஹு லிமன்ஹமீதா‘ என்று எழும்போதும் ருகூவு செய்யும்போதும் இரண்டாம் ரக்அத்திலிருந்து மூன்றாம் ரக்அத்திற்காக எழும்போதும் தான் கைகளை உயர்த்தி இருக்கிறார்கள். இவ்வாறு ஒரு குறிப்பிட்ட நிலையிலிருந்து மற்றொரு நிலைக்கு மாறும்போது மட்டுமே நபி(ஸல்) அவர்கள் கரங்களை உயர்த்தினார்கள் என்பதை நபிமொழிகளின் மூலம் அறிய முடிகிறது.

ஜனாஸா தொழுகையில் மேற்கண்ட மற்ற தொழுகைகளில் போன்று நிலைமாற்றங்கள் இல்லை. ருகூவு, சுஜூ து போன்றவையும் இல்லை. ஒரே நிலையிலேயே, நான்கு தக்பீர்களும் சொல்லப்படுகின்றன. எனவே, ஜனாஸா தொழுகையில் முதல் தக்பீரில் மட்டுமே கைகளை உயர்த்த வேண்டும் என்ற முடிவுக்கே வரவேண்டும்.

## உயர்த்திய கைகளை எங்கே கட்ட வேண்டும்

ஜனாஸா தொழுகையில் கைகளை எங்கே கட்ட வேண்டும் என்று தனியாக ஏதும் விபரங்கள் நபிமொழிகளில் காணப்படாததால் மற்ற தொழுகைகளைப் போன்றே நெஞ்சின் மீது கைகளைக் கட்ட வேண்டும் என்பதே சட்டமாகும். ஜனாஸாத் தொழுகைக்கென்று பிரத்தியேகமாக ஏதாவது இருந்தால் கண்டிப்பாக அதைப் பற்றி நபி(ஸல்) அவர்கள் தம் தோழர்களுக்குத் தெளிவுபடுத்தி இருப்பார்கள்.

நபி(ஸல்) அவர்கள் தம் இடக்கரத்தை நெஞ்சில் வைத்து, அதன் மீது வலக்கரத்தை வைத்து தக்பீர் கட்டினார்கள் என்று ஹு ல்ப்(ரலி) அறிவிக்கும் நபிமொழி அஹ்மதில் இடம் பெற்றுள்ளது.

## முதல் தக்பீருக்குப் பின்பு

முதலில் தக்பீர் கட்டியதும் மற்ற தொழுகைகளில் ஓதுவது போல அல்லாஹு ம்ம பாயித் பைனீ" என்ற பிரார்த்தனையையோ, அல்லாஹு ம்ம இன்னீ வஜ்ஜஹ்து வஜ்ஹிய" என்ற பிரார்த்தனையையோ அல்லது வேறு பிரார்த்தனைகளோ ஓத வேண்டுமென நபிமொழிகளில் தெரிவிக்கப்படவில்லை. ஆனால், முதல் தக்பீருக்குப் பின்னர் சூரத்துல் பாத்திஹாவை ஓத வேண்டுமென பின்வரும் நபிமொழி தெரிவிக்கிறது.

ம்இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்குத் தொழ வைத்தார்கள். அப்போது சூரத்துல் பாத்திஹாவை (சப்தமாக ஓதினார்கள். சூரத்துல் பாத்திஹாவை ஓதுவது நபிவழிதான் என உங்களுக்கு அறிவிக்கவே (சப்தமிட்டு) ஓதினேன் எனவும், விளக்கமளித்தார்கள்" என தல்ஹா இப்னு அப்தில்லாஹ் இப்னி அவ்ஃப்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: புகாரி, அபூதாவூத் மற்றும் திர்மிதி)

நஸயீ நூலில், சூரத்துல் பாத்திஹாவையும், அதனுடன் மற்றொரு சூராவையும் சப்தமிட்டு ஓதியதாகவும், பின்னர் அது பற்றிக் கேட்டபோது சூரத்துல் பாத்திஹாவையும், மற்றொரு சூராவையும் ஓதுவதே நபிவழி என நீங்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு சப்தமாக ஓதினேன்" என்று அப்பாஸ்(ரலி) கூறியதாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்த நபிமொழிகளில் சூரத்துல் பாத்திஹாவை முதல் தக்பீரில் நாம் ஓத வேண்டும் என்பதற்குக் குறிப்புகள் இல்லை. ஆனால் நஸயீ, ஹாகிம் போன்ற நபிமொழித் தொகுப்புகளில் பின்வரும் நபிமொழி பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஜனாஸா தொழுகையின் முதல் தக்பீர் கூறியதும், சப்தமின்றி சூரத்துல் பாத்திஹா ஓதுவது, நபிவழியாகும்" என்று அபூஉமாமா இப்னி ஸஹ்ல்(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்: நஸயீ, ஹாகிம்)

எனவே, ஃபாத்திஹா சூராவைச் சப்தமின்றியே ஓத வேண்டும்.

## 2வது தக்பீருக்குப் பின்பு

2வது தக்பீருக்குப் பின்பு நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்ல வேண்டும்.

ஜனாஸா தொழுகையில் தக்பீர் கட்டுவதும், பின்பு சூரத்துல் பாத்திஹா ஒதுவதும், பின்னர் நபி(ஸல்) அவர்கள் மீது ஸலவாத்துச் சொல்வதும், பின்பு அந்த மய்யித்திற்காக நல்லதை நாடி பிரார்த்திப்பதும் நபிவழியாகும்' என அபூஉமாமா இப்னு ஹஸ்ல் இப்னி ஹு னைஃப்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: நஸயீ)

2வது தக்பீருக்குப் பின்புதான் ஸலவாத்து ஓத வேண்டுமென மேற்கண்ட நபிமொழியில் நேரடியாகக் காணப்படாவிட்டாலும், சூரத்துல் பாத்திஹா ஓதியதற்குப் பின்பு என்று வருவதாலும் அதைக் குறிக்க ஸு ம்ம' (பின்னர்) என்ற வார்த்தை பயன்படுத்தப்பட்டுள்ளதாலும், இரண்டாவது தக்பீருக்குப் பின்பே அதை ஓத வேண்டும். மேலும் குறிப்பிட்ட ஸலவாத்தை ஓத வேண்டுமென கூறப்படாததால் அத்தஹிய்யாத்தில் நாம் ஓதும் ஸலவாத்தையே இந்த இடத்திலும் ஓதிக்கொள்ள வேண்டும்.

## மற்ற தக்பீர்களில்...!

மற்ற தக்பீர்களில் ஓதும் பிரார்த்தனைகள் பல வந்துள்ளன. அவற்றில் எதை வேண்டுமானாலும் ஓதலாம். இந்த தக்பீருக்குப் பின் இதைத்தான் ஓத வேண்டுமென குறிப்புகள் ஏதும் நபிமொழிகளில் இல்லை.

மய்யித்துக்கு நீங்கள் தொழவைத்தால் அந்த மய்யித்துக்காக நல்ல முறையில் பிரார்த்தியுங்கள்' என்று நபி(ஸல்) அவர்கள் கூற நான் கேட்டுள்ளேன்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: இப்னு ஹிப்பான், ஹாகிம், அபூதாவூத், இப்னுமாஜா மற்றும் பைஹகீ)

ஹதீஸ் எண்: 1

நபி(ஸல்) அவர்கள் ஜனாஸாவுக்குத் தொழவைக்கும்போது அல்லாஹும்ம .்.பிர் லிஹய்யினா வமய்யிதினா வஷாஹிதினா வகாயிபினா வஸகீரினா வகபீரினா வதகரினா வஉன்ஸானா. அல்லாஹும்ம மன் அஹ்யய்தஹு மின்னா .பஅஹ்யிஹீ அலல் இஸ்லாம், வமன் தவஃப்பய்தஹு மின்னா .பதவஃபஹு அலல் ஈமான்" (பொருள்: யா அல்லாஹ்! எங்களில் உயிரோடிருப்பவர்களையும், மரணித்துவிட்டவர்களையும், இங்கே வந்திருப்போரையும் வராமலிருப்பவர்களையும், எங்களின் சிறுவர்களையும், பெரியவர்களையும், எங்களில் (எல்லா) ஆண்களையும், (எல்லாப்) பெண்களையும் மன்னித்துவிடுவாயாக! யா அல்லாஹ் எங்களில் உயிரோடு இருப்பவர்களை இஸ்லாமிய அடிப்படையில் வாழச் செய்வாயாக! எங்களில் இறந்துவிடுபவர்களை ஈமான் உடனே இறக்கச் செய்வாயாக!) என்று ஓதுபவர்களாக இருந்தனர்" என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: திர்மிதி, அஹ்மத் அபூதாவூத் மற்றும் நஸயீ)

இப்னுமாஜாவில் அல்லாஹும்ம லா தஹ்ரிம்னா அஜ்ரஹு வலா துளில்லனா பஅதஹு " (பொருள்: யா அல்லாஹ்! இந்த மய்யித்தின் நற்செயல் களுக்கான கூலியை எங்களை விட்டும் தடுத்துவிடாதே! இவருக்குப் பின்னர் (நாங்கள் அறியாத குழப்பங்களால்) எங்களை வழி தவறச் செய்துவிடாதே.) என்ற வார்த்தைகள் மேற்கண்டதை விட அதிகமாகக் காணப்படுகின்றன.

ஹதீஸ் எண்: 2

அல்லாஹும்ம.்.பிர் லஹு வர்ஹம்ஹு வஆ.பிஹி வஃபு அன்ஹு வஅக்ரிம் நுஸுலஹு வவஸ்ஸி.மத்கலஹு வ.்ஸில்ஹு பில்மாயி வஸ்ஸல்ஜி வல்பரதிவநக்கிஹி மினல் கதாயா கமா யுனக்கஸ் தவ்புல் அப்பளு மினத்தனஸி வஅப்தில்ஹு தாரன் கைரன் மின்தாரிஹி, வஅஹ்லன் கைரன் மின்அஹ்லிஹி வஸவ்ஜன் கைரன் மின்ஜவ்ஜிஹி வஅத்கில்ஹு ல் ஜன்னத வ அயித்ஹு மின் அதாபில் கப்ரி வமின். அதாபின்னார். (பொருள்: யா அல்லாஹ்! இவரை மன்னித்து அருள் புரிவாயாக! இவரின் பிழை பொறுத்து சுகமளிப்பாயாக! இவர் செல்லுமிடத்தை சங்கைப்படுத்துவாயாக! இவர் புகும் இடத்தை (கப்ரை) விசாலமாக்கி வைப்பாயாக! பனிக்கட்டி. ஆலங்கட்டி மற்றும் தண்ணீரால் இவரின் (பாவங்களைக்) கழுவி, தூய்மைப்படுத்துவாயாக! அழுக்கிலிருந்து வெள்ளை ஆடை சுத்தப்படுத்தப்படுவது போன்று, இவரின் பாவத்திலிருந்து இவரைச் சுத்தப்படுத்துவாயாக! (இங்குள்ள) இவரின் குடும்பத்தாரை விடச் சிறந்த குடும்பத்தாரை இவருக்கு வழங்குவாயாக! (இங்குள்ள) ஜோடியை விடச் சிறந்த ஜோடியை இவருக்குக் கொடுத்தருள்வாயாக! கப்ரின் சோதனையை விட்டும், நரகின் வேதனையை விட்டும் இவரைப் பாதுகாத்து சுவனத்தில் புகச் செய்வாயாக!) என்று ஒரு ஜனாஸாவுக்குத் தொழவைக்கும்போது நபி(ஸல்) கூறியதை நான் மனனம் செய்துகொண்டேன் என்று கூறி அவ்.்ப் இப்னு மாலிக்(ரலி) அவர்கள் இந்த (சிறப்பான) பிரார்த்தனையின் காரணத்தால், அந்த மய்யித்து நானாக இருந்திருக்கக் கூடாதா என்றும் எண்ணினேன் என கூறினார்." அவ்.்ப்

இப்னுமாலிக்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: முஸ்லிம், நஸயீ, இப்னுமாஜா, அஹ்மத் மற்றும் பைஹகீ) ஹதீஸ் எண்: 3

ஜனாஸா தொழவைக்கும்போது, நபி(ஸல்) அவர்கள் அல்லாஹு ம்ம அப்துக வப்னு அப்திக கானயஷ்ஹது அன்லாயிலாஹ இல்லா அன்த வஅன்ன முஹம்மதன் அப்துக வரஹு லிக, வஅன்த அ∴லமு பிஹி, மின்னி இன்கான முஹஸினல்∴பஸித்∴பீ இஹ்ஸானிஹி வஇன்கான மூஸிஅன் ∴பக்∴பிர் லஹு ‘ வலா தஹ்ரிம்னா அஜ்ரஹு வலா த∴ப்தின்னா ப∴தஹு ‘ (பொருள்: யா அல்லாஹ்! இவர் உன் அடிமையும், உன் அடிமையின் மகனும் ஆவார். இவர், உன்னைத் தவிர‘ வணங்குவதற்கு தகுதியான இறைவன் வேறு யாருமில்லை எனவும், முஹம்மத்(ஸல்) அவர்கள் உன் அடியாரும், உன்னுடைய உண்மைத் தூதரும் ஆவார் எனவும் பரிபூரணமாக நம்பி இருந்தார்‘ என்பதை நீ நன்றே அறிந்திருக்கிறாய். இவர் நல்லவராக இருந்தால் அவரின் நற்கூலியை அதிகரிப்பாயாக! இவர் தீயவராக இருந்தால் மன்னித்தருள்வாயாக! அவரின் நற்செயல்களுக்குரிய கூலியை எங்களை விட்டும் தடுத்துவிடாதே, இவருக்குப் பின்பு எங்களைக் குழப்பத்தில் ஆழ்த்திவிடாதே!‘) என்று கூறுவார்கள் என அபூஹு ரைரா(ரலி) மற்றும் அபூய∴லா(ரலி) அறிவிக்கிறார்கள். ஹதீஸ் எண்: 4

அல்லாஹு ம்ம இன்ன ∴புலா னப்னு ∴புலானின் ∴பிதிம்மதிக வஹப்லி ஜவாரிக, ∴பகிஹி மின்∴பித்னத்தில் கப்ரி வமின் அதா பின்னாரி ∴ப அன்த அஹ்லுல் வ∴பாயி வல் ஹக்கி, ∴ப∴க்பிர்லஹு வர்ஹம்ஹு இன்னக அன்தல் க∴பூருர் ரஹீம்‘ (பொருள்: யா அல்லாஹ்! இன்னாரின் மகனான இவர் உன் பொறுப்பில் இருக்கிறார். உன் அண்மையில் இருக்கிறார். கப்ரில் சோதனையை விட்டும் இவரைப் பாதுகாப்பாயாக! நீயே வாக்குறுதிகளை நிறைவேற்றுபவன்! உண்மையாளன். இவரை மன்னித்து அருள் புரிந்திடு! நீயே மன்னிப்பவன்! அருள் புரிபவன்!.) என்றும் நபி(ஸல்) அவர்கள் ஜனாஸா தொழுகையில் பிரார்த்தித்தார்கள்“ என வாஸிலத் இப்னு அல் அஸ்க∴(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: இப்னுமாஜா, அஹ்மத் மற்றும் இப்னுஹிப்பான்)

முதலாவதாக உள்ள இரண்டு தக்பீர்களில் முறையே சகூரத்துல் ∴பாத்திஹாவும், ஸலவாத்தும் ஓத வேண்டாம் என இருப்பதால் அதுவல்லாத மற்ற தக்பீர்களில் மேற்கண்ட பிரார்த்தனைகளைக் கோரவேண்டும். ஹதீஸ் எண்: 5

சிறு குழந்தைகள் இறந்து விட்டால் அவர்களுக்குக் கீழ்காணும் பிரார்த்தனையைக் கோர வேண்டும். நபிமொழிகளில் காணப்படுகிறது. அல்லாஹு ம் மஜ்அல்ஹு லனா பரதவ் வஸல∴பன் வஅஜ்ரா.“ (பொருள்: பொருள்: யா அல்லாஹ்! இந்தக் குழந்தையை எங்களுக்கு முன்னதாகச் (சுவர்க்கம்) சென்று எங்களை எதிர்பார்க்கக் கூடியதாகவும் எங்களின் நற்கூலிக்குக் காரணமாகவும் ஆக்குவாயாக!.“

இந்த நபிமொழி அபூஹு ரைரா(ரலி) அவர்கள் அறிவிக்க பைஹகியில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும், மய்யித்து ஆணாக இருந்தாலும் - பெண்ணாக இருந்தாலும், மேற்கண்ட பிரார்த்தனைகளை ஓதலாம். இலக்கணரீதியாக ஆனுக்கு ஆண்பால் விகுதிகளையும் பெண்ணிற்கு பெண்பால் விகுதிகளையும் சேர்க்க வேண்டிய அவசியமில்லை, ஏனெனில், மய்யித்துக்கு பிரார்த்தனைச் செய்வதால் இது பற்றிய பிரச்சினை ஏதும் இல்லை.

ஜனாஸா தொழுகையில் கடைசி தக்பீர் சொன்ன பின்னர் ஸலாம் சொல்வது நபிவழியாகும் என. அபூ உமாமா இப்னு ஸஹ்ல இப்னி ஹு னை∴ப்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: நஸயீ)

### ஒரு ‘ஸலாம்’ கொடுத்தால் போதுமா?

நபி(ஸல்) அவர்கள் ஒரு ஜனாஸாவுக்கு தொழ வைக்கும் போது, நான்கு தக்பீகள் கூறினார்கள். ஒரேயொரு ஸலாம்' கூறினார்கள்'' என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார்கள். (நூல்கள்: தாரகுத்னீ, ஹாகிம் மற்றும் பைஹகீ)

அலீ இப்னு அபூதாலிப், அப்துல்லாஹ் இப்னு உமர், அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ், ஜாபிர் இப்னு அப்தில்லாஹ், அப்துல்லாஹ் இப்னு அபீ அவ்ஃபா(ரலி) போன்ற நபித் தோழர்கள் ஜனாஸா தொழுகையில் ஒரேயொரு ஸலாம்' (வலப்புறம்) மட்டுமே கொடுத்து முடித்திருக்கிறார்கள். (நூல்: ஹாகிம்)

தொழுகையில் 'ஸலாம்' கொடுப்பது போல இரண்டு முறை ஸலாம்' கொடுப்பதற்கும் ஆதாரம் உள்ளது.

தொழ வைப்பவர் எங்கே நிற்க வேண்டும்?

ஜனாஸா ஆணாக இருந்தால் தொழவைப்பவர் அதன் தலைக்கு நேராகவும் பெண்ணாக இருந்தால் ஜனாஸாவின் நடுப்பகுதிக்கு நேராகவும் நின்று தொழுகை நடத்துவது நபிவழியாகும்.

அனஸ்(ரலி) அவர்கள் ஓர் ஆண் மய்யித்துக்குத் தொழ வைக்கும்போது, அதன் தலைக்கு நேராக நின்று தொழ வைத்தார்கள், அதன் பின்னர் ஒரு பெண்ணின் ஜனாஸா கொண்டு வரப்பட்டது, அப்போது, அதன் நடுப்பகுதிக்கு நேராக நின்று தொழவைத்தார்கள். எங்களில் அலாஃ இப்னு ஸியாத் என்பவரும் இருந்தார். அனஸ்(ரலி) அவர்கள் ஆணுக்கும் பெண்ணுக்கும் வெவ்வேறு இடங்களில் நின்று தொழ வைத்ததைக் கண்ட அவர், நபி(ஸல்) அவர்கள் இவ்வாறுதான் நின்று தொழ வைத்தார்களா?'' என்று கேட்டதற்கு அனஸ்(ரலி) அவர்கள், ஆம்' என்றார் என அபூ காலிப் அல் ஹய்யாத் அறிவிக்கிறார். (நூல்: அஹ்மத், இப்னுமாஜா மற்றும் திர்மிதீ)

நீங்கள் தொழ வைத்ததைப் போன்று ஜனாஸாவுக்கு நான்கு தக்பீர்கள் சொல்லி, ஆண் மய்யித்தின் தலைக்கு நேராகவும், பெண் மய்யித்தின் இடுப்புக்கு நேராகவும் நின்றுதான் நபி(ஸல்) அவர்கள் தொழ வைத்தார்களா?' என்று கேட்டதற்கு, அனஸ்(ரலி) அவர்கள் ஆ என்று சொன்னதாக அபூதாவூதிலும் இடம் பெற்றுள்ளது.

பிரசவத்தில் மரணித்துவிட்ட ஒரு பெண்ணின் ஜனாஸாவுக்கு நபி(ஸல்) அவர்கள் தொழ வைத்தபோது நானும் அவர்களின் பின்னால் நின்று தொழுதேன்'' என சமுரா இப்னு ஜு ன்துப்(ரலி)அறிவிக்கிறார்.

(நூல்: புகாரி, அஹ்மத், அபூதாவூத், திர்மிதி, இப்னுமாஜா மற்றும் நஸயீ)

ஆண் மய்யித் ஒன்றையும். பெண் மய்யித் ஒன்றையும் தனித்தனியாகக் கொண்டு வரும்போது மேற்கண்டதை சட்டமாக எடுத்துக் கொள்ளவேண்டும். பல ஜனாஸாக்கள் ஒரே நேரத்தில் கொண்டுவரப்படுமானால் அப்போது என்ன செய்ய வேண்டும் என்ற ஒரு கேள்வி எழலாம்.

ஒரு சிறுவனின் சடலமும், ஒரு பெண்ணின் சடலமும் ஒரே நேரத்தில் கொண்டு வரப்பட்டது. தொழுவோருக்கு முன்பாக சிறுவனின் சடலத்தையும், அதற்குப் பின்னதாக பெண்ணின் சடலத்தையும் வைத்து தொழுகை நடத்தப்பட்டது. அப்போது அபூஸயீத் அல் குத்ரீ, இப்னு அப்பாஸ், அபூ கதாதா மற்றும் அபூஹுரைரா(ரலி) ஆகிய நபித்தோழர்களும் அங்கிருந்தனர். அவர்களிடத்தில் இவ்வாறு தொழுபவர்களுக்கு முன்பாக சிறுவனின் சடலத்தையும் அதற்குப் பின்னதாக பெண்ணின் சடலத்தையும் வைத்து தொழுகை நடத்தப்பட்டது. அப்போது இது பற்றி நான் கேட்டதற்கு, அவர்கள், இது நபிவழியாகும் என்று கூறினார்கள்'' என அம்மார்(ரலி) அறிவிக்கிறார். (நூல்: நஸயி, அபூதாவூத் மற்றும் பைஹகீ)

இது போன்றே ஆண் மய்யித்து ஒன்றும், பெண் மய்யித்து ஒன்றும் கொண்டு வரப்பட்டால் சேர்த்துத் தொழ வைக்கும்போது முதலில் ஆண் மய்யித்தையும் அதற்குப் பின்னதாக பெண் மய்யித்தையும்

வைத்து தொழுகை நடத்த வேண்டும். தேவைப்பட்டால் தனித் தனியாகவும் தொழுகை நடத்தலாம். அதற்குத் தடை ஏதும் இல்லை. மேற்கண்ட நபிமொழியிலிருந்து பல மய்யித்துக்கள் ஒரே நேரத்தில் கொண்டு வரப்பட்டால் அவை அனைத்திற்கும் ஒரே தொழுகையே போதுமானது எனும் சட்டத்தை அறியலாம்.

### காயிப் ஜனாஸா

ஒருவர் வெளிநாட்டிலோ, தூரமான ஊரிலோ இருக்கும்போது இறந்து விட்டால் அவரின் இறப்புச் செய்தியைக் கேள்விப்படுபவர்கள், தாமிருக்கும் இடத்திலிருந்தே அவருக்காகத் தொழும் தொழுகை காயிப் ஜனாஸாம் என்று கூறப்படும், காயிப் ஜனாஸா மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டதா, இல்லையா?

நபி(ஸல்) அவர்கள் மதீனாவில் இருந்தபோது, ஹபஷாவில் இறந்துவிட்ட அஸ்ஹு மாம் என்ற மன்னரின் இறப்புச் செய்தியை அவர் இறந்த அன்றே மக்களுக்குத் தெரிவித்தார்கள். (நபி(ஸல்) அவர்களுக்கு இறைவன் வழங்கியிருந்த அற்புதங்களில் இதுவும் ஒன்றாகும்) அல்லாஹ்வின் நல்லடியார் - உங்கள் சகோதரர் இறந்து விட்டார். எனவே அவருக்காக தொழுங்கள் என்று நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள். அப்போது நபித்தோழர்கள் அது யார் எனக் கேட்டதற்கு, நஜ்ஜாஷிம் என்று நபி(ஸல்) அவர்கள் பதிலளித்து விட்டு, உங்கள் சகோதரருக்காகப் பாவமன்னிப்புக் கோருங்கள்‘ என்றும் கூறினார்கள். நபித் தோழர்களுடன் நபி(ஸல்) அவர்களும் தொழும் இடத்திற்கு வந்து ஜனாஸா வுக்குத் தொழவைப்பது போன்று தொழ வைத்தார்கள். தொழுகையில் நான்கு தக்பீர்கள் சொன்னார்கள் என அபூஹு ரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்: புகாரி, முஸ்விம், அபூதாவூத், அஹ்மத், நஸயீ, இப்னுமாஜா, பைஹகீ மற்றும் திர்மிதி)

முஸ்லிமாக வாழ்ந்து கொண்டிருந்த நஜ்ஜாஷி மன்னருக்கு நபி(ஸல்) அவர்கள் அவர் இறந்த ஊரை விட்டும் வெகு தொலைவிலுள்ள மதீனாவில் காயிப் ஜனாஸா தொழுகை நடத்தியிருக்கிறார்கள் என்றாலும், சிலர் இதுபற்றிக் கூறுகையில், இது நபி(ஸல்) அவர்களுக்கு மட்டும் உரிய சலுகைகளில் ஒன்றாகும். எனவே காயிப் ஜனாஸா தொழுகை நடத்துவதற்கு தற்போது அனுமதி இல்லை“ என்று கூறுகின்றனர். மேலும், அந்த நஜ்ஜாஷி மன்னர் முஸ்லிமாக வாழ்ந்ததை அவர் வெளிக்காட்டிக் கொள்ளாமல் இருந்தார். எனவே அவர் இறந்தபோது அவர் இருக்கும் இடத்தில் அவருக்காகத் ஜனாஸா தொழ வைப்பதற்கு யாரும் இல்லாத காரணத்தால்தான் நபி(ஸல்) அவர்கள் மதீனாலில் வைத்து அவருக்காகத் தொழுகை நடத்தினார்கள் என்றும் கூறுகின்றனர். உண்மையில் இது தவறான ஒரு முடிவாகும், ஏனெனில் நபி(ஸல்) அவர்கள் மட்டும் இவருக்காகத் தொழாமல் உங்கள் சகோதரருக்காகப் பாவ மன்னிப்புக் கோருங்கள்“ என்று தம் தோழர்களிடமும் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம், அஹ்மத் மற்றும் நஸயீ) அதற்கினங்க நபித்தோழர்களும் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் இரண்டு அணியினராக இருந்து தொழுதிருக்கிறார்கள். (முஸ்லிம், அஹ்மத்) மய்யித்துக்குத் தொழ வைப்பது போன்றே நபி(ஸல்) அவர்கள் தொழ வைத்தார்கள்‘ என்றும் நபித்தோழர்கள் அறிவித்துள்ளனர். எனவே காயிப் ஜனாஸா என்பது மார்க்கத்தில் அங்கீகரிக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ள வேண்டும்.

நபி(ஸல்) அவர்கள் ஒரு மனிதரை நோய் விசாரிக்கச் செல்பவர்களாக இருந்தார்கள். அவர் இறந்தபோது அவரை இரவோடு இரவாகவே அடக்கம் செய்து விட்டு மறுநாள் காலையில் நபி(ஸல்) அவர்களுக்கு அதைத் தெரிவித்தார்கள், (இரவிலேயே) எனக்கு ஏன் தெரிவிக்கவில்லை?‘ என்று நபி(ஸல்) அவர்கள் கேட்க, இருள் நிறைந்த இரவாக இருந்ததால் உங்களுக்கு கஷ்டம் தருவதை நாங்கள் விரும்பவில்லை‘ என்று தோழர்கள் கூறினார்கள். உடனே நபி(ஸல்) அவர்கள் அவரை அடக்கம் செய்திருந்த கப்ருக்கு வந்து அவருக்காக நான்கு தக்பீர்கள் சொல்லி தொழுதார்கள்.“

இந்த ஹதீஸ் அப்துல்லாஹ் இப்னு அப்பாஸ்(ரலி) அவர்கள் அறிவிக்கிறார்கள். (புகாரி, இப்னுமாஜா, முஸ்லிம், நஸயீ, திர்மிதி, பைஹகீ மற்றும் அஹ்மத்)

புகாரியின் மற்றோர் அறிவிப்பில் ஏற்கனவே தொழுதவர்களும் நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் நின்று மீண்டும் தொழுதார்கள் என இடம் பெற்றுள்ளது. நபி(ஸல்) அவர்களுக்குப் பின்னால் நாங்கள் அணிவகுத்து நின்றோம். நானும் அவர்களில் ஒருவன் என இப்னு அப்பாஸ்(ரலி) கூறினார் என இடம் பெற்றுள்ளது. தோழர்கள் இவ்வாறு செய்ததை நபி(ஸல்) அவர்கள் ஆட்சேபிக்க வில்லை. எனவே, காயிப் ஜனாஸா மார்க்கத்தில் உள்ள ஒன்று என்பதே சரியான முடிவாகும். அதற்கு இன்னும் சில ஆதாரங்களைப் பார்ப்போம்.

பள்ளிவாயிலைக் கூட்டி சுத்தம் செய்து கொண்டிருந்த ஒரு வாலிபரோ அல்லது பெண்மணியோ இறந்துவிட்டபோது அதை மிகச் சாதாரணமாக கருதி நபி(ஸல்) அவர்களுக்கு நபித்தோழர்கள் தெரிவிக்காமல் அடக்கம் செய்துவிட்டனர். அது பற்றிச் சில நாட்களுக்குப் பின்னர் தெரியவந்தபோது நபி(ஸல்) அவர்கள் அந்த கப்ருக்கு அருகில் சென்று ஜனாஸா தொழுகை நடத்தினார்கள்.“ என அபூஹுரைரா(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: புகாரி, முஸ்லிம், அபூதாவூத், இப்னுமாஜா, பைஹகீ மற்றும் அஹ்மத்)

உம்மு ஸஅத்(ரலி) அவர்கள் இறந்தபோது நபி(ஸல்) அவர்கள் ஊரில் இல்லை. வெளியூரிலிருந்து திரும்பியவுடன் (அதைக் கேள்விப்பட்டு) அவர்களுக்காக ஜனாஸா தொழுகை நடத்தினார்கள். அது அவர்கள் இறந்த ஒரு மாதத்திற்குப் பின்னர் நடந்தது.“ என ஸயித் இப்னுல் முஸய்யப்(ரலி) அறிவிக்கிறார். (நூல்கள்: திர்மிதி, பைஹகி)

எனவே, காயிப் ஜனாஸா தொழ மார்க்கத்தில் அனுமதி உண்டு என்பதையும், இறப்புச் செய்தியைக் கேட்டவுடன் அது பல நாட்களுக்குப் பின்னராக ஆனாலும் சரியே தொழலாம் என்பதைப் புரிந்து கொள்ளவேண்டும். வெளிநாட்டில் வசிப்பவர்கள் எப்போது இறப்புச் செய்தியைத் தபால் மூலமோ அல்லது வேறு வகைகளிலோ அறிகிறர்களோ அப்போது ஜனாஸா தொழுகை தொழலாம்.

நபி(ஸல்) அவர்கள் கப்ருக்குச் சென்று அங்கே ஜனாஸா தொழுகை நடத்தியுள்ளதாக இந்த நபிமொழிகள் கூறுகின்றன. எனவே ஜனாஸாவோ, அல்லது கப்ரோ முன்னிலையில் இருப்பது அவசியம். அவ்வாறு இல்லாவிட்டால் ஜனாஸா தொழுகை கூடாது என்பது சிலரின் கூற்று.

இந்த நபிமொழிகளில் அவ்வாறு விளங்க வழி இருந்தாலும் நஜ்ஜாஷி மன்னருக்குத் தொழவைத்தபோது அவர்களின் முன்னே ஜனாஸாவோ, கப்ரோ இருக்கவில்லை. எதுவும் முன்னால் இல்லாமலேயேதான் தொழுதுள்ளார்கள். இது பலமான கூற்றாக ஆகாது.

எனவே தங்களுக்கு மிகவும் வேண்டியவர் யாரேனும் இறந்துவிட்டால் அவருக்காக ஒருவர் காயிப் ஜனாஸா தொழுது கொள்ளலாம் என்பதை விளங்க வேண்டும். இறப்புச் செய்திகள் எது கிடைத்தாலும் தொழுகை நடத்த வேண்டும் என்று இதை தவறாக விளங்கிக் கொள்ளக் கூடாது.

அல்லாஹ் மிக அறிந்தவன்